# ஸ்ரீ அரிசாரம்

இயற்றியவர்

**D.பட்டம்மாள்**

# ஸ்ரீ அரிசாரம்

வியாசர் மகன் சுகர், பரீக்ஷித்து மகாராஜாவிற்குச் சொன்னதே பாகவதமாகும். அதனைத் தழுவியதே ஸ்ரீ அரிசாரமாகும். இதில் பாகவதத்திலுள்ள ஒரு கதையும் விட்டுப் போகவில்லை. 2000, 3000 பக்கங்கள் கொண்ட பாகவதத்தைப் படிக்க பெரியவர்களுக்கு நேரமே கிடையாது. பெரியவர்களுக்கே இந்நிலை என்றால் சிறுவர்களுக்கு கேட்கவே வேண்டாம். இதனைப் படிப்பதால் பண்டைய கால பழக்க வழக்கங்களும் நீதி நெறிகளும் அறிய வாய்ப்புண்டாகிறது. சிறுவர்களும் புரிந்துகொள்ள ஏதுவாக, எளிய தமிழ் நடையில் அமைந்துள்ளது. இது வரை ஏழு புத்தகங்கள் பிரசுரித்த போதிலும் என் உடல் நிலை மிகவும் மோசமாக இருப்பதால், என்னால் இனி பிரசுரிக்க முடியவில்லை. இந்நிலையையறிந்த திரு. பாலகிருஷ்ண சாஸ்திரிகள், என் மீதுள்ள இரக்கத்தாலும், எழுதிய விஷயத்தின் சிறப்பாலும் திரு. நாச்சியப்பன் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவரைக் கொண்டே இதனை பிரசுரிக்கவும் சிபாரிசு செய்துள்ளார். இவர்கள் இருவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கங்கள். இதனைப் பாராயணம் செய்யவே எழுதியதால், இதற்கு மெட்டமைக்கவில்லை.

பாராயணம் செய்வோர் பரந்தாமன் அருள் பெற்று உய்ய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

# சிறப்புரை

ஸ்ரீமதி பட்டம்மாள் அவர்கள் எளிய நடையில் இதுவரை அநேக பாடல்களை இயற்றி இருக்கிறார்கள். அவைகளை ஸங்கீத வித்வான்கள் கச்சேரியில் பாடி மகிழ வைத்திருக்கிறார்கள். தன்னுடைய உடல் நிலை குன்றியிருப்பினும், ஸ்ரீமதி பாகவதத்தை தமிழில் எளிய பாடல்களாக அமைத்து பாடி இருக்கிறார்கள். இதற்கு "ஹரிஸாரம்" என்ற தலைப்பு சூட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய விடாமுயற்சியும், ஊக்கமும், பாகவதபுராணத்தில் சொல்லப்பட்ட கதாப்பாத்திரங்களை விடாமல் அழகுடன் எளிய பாடல்களாக அமைந்திருக்கிறது மிகவும் போற்றற்குரியது. இதற்கு ராகம் தாளம் குறிப்பு அவர்கள் போடவில்லை. ஒருக்கால் பாடுபவர்கள் தங்கள் மனோதர்மப்படி அமைத்துக் கொள்ளட்டும் என்று விரும்பியிருக்கலாம். அப்படி அவர்கள் ராகம் தாளம் அமைத்தால் அவர்கள் நினைத்தது போல் மற்றவர்களும் பாட முடியும். இதில் கதாபாத்திரம்தான் முக்கியம் என்ற எண்ணம் கொண்டு, ஸாகித்தியங்களையே அமைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எப்படியும் இது ஒரு சிறந்த நூல். இதை படிப்பவர்க்கு எளிதாய் ஒருமுறை பாகவதம் படித்தது போன்ற அனுபவம் உண்டாகும். அவர்களுடைய இந்த நன்முயற்சியை உலகிற்குப் பயன்பட உதவி அச்சிட்டு கொடுக்க முன் வந்த தர்மீக ஸ்ரேஷ்ட ஸ்ரீமான் நாச்சியப்பன் அவர்களுக்கும் நாம் நன்றி உடையவர்களாக ஆகிறோம். ஸ்ரீஹரி இந்த நூலில் குடி இருப்பதால் அவர் அருள் படிப்பவர்களுக்கும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

"ஸ்ரீஸத்குரு"
12, சீனிவாசா அவினியு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28.

பக்தியுடன்
T.S. பாலகிருஷ்ண சாஸ்திரி

# கணபதி துணை

ப. பனி மலை மகளான பார்வதி மகனே
பணிந் தோர்க்கு அருளும் கணபதியே

அ. சனி பார்வையினால் சிரம் மறைந்திடவும்
சிவனருளால் கரிமுகத்தினை யடைந்திட்ட

ச. பெற்றோரின் பெருமையை புவனமறிந்திட
சுற்றியவர்களை பழம் பெற்றாயே
உற்றோர் மற்றோர்க்கும் உதவி புரிந்திட
சற்றேனும் சளைக்காமல் சடுதியில் வந்திடும்

**ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தத்தின் தமிழாக்கம்**

1. கோவிந்தனை நினை மூடமனமே!
   கோவிந்தனை துதி எப்போதுமே
   தேவைக்கு ஏற்ற (பணத்தை)
   குலத் தொழில் புரிந்து பெற்று
   மன நிறைவுடனே தானம் பல செய்து

2. காமம்தனை நீக்கி வம்சவிருத்திக்குக் கூடி
   அசிங்கம் அசுத்தமென்று வெறுத்து ஒதுக்கி

3. நோய் மிகுந்த இந்த நிலையற்ற தேகத்தில்
   ஆசை வைத்து அழியாதே
   மாய்ந்திடும் நேரம் அறிந்திட முடியாததால்
   காலத்தை கடத்தாமல் இக்கணமே - நீ

4. பணம் படைத்தானிடம் பலரும் கூடுவர்
   பணமிழந்தானை பந்துவும் தூற்றுவர்
   பணம் தரும் சுகம் நிலையல்ல என்றறிந்து
   பரந்தாமன் தந்திடும் ஆத்மஞான சுகம்பெற

5. உயிருள்ள உடலை கட்டித் தழுவுவர்
   உயிர் பிரிந்தாலோ அருவருத்தஞ்சுவர்
   உயிருடன் கூட இருவினை வருமே
   உடலையழித்திட கூட்டம் வருமே.

6. தனத்தால் வரும் கேட்டை, அறிந்த பின்னும்
   தனத்தைத் தேடி அலையாதே.
   தனமும் தானாய் உன்னையடைந்தால்
   தானம் பல செய்து நற்கதி பெறவே.

7. வாழ்க்கை செயல்களை மனம் போனபடி செய்து
   வாழ்வை பயனற்று வீணடிக்காதே
   ஆழ்ந்து யோசித்து மரண சமயத்திலும்
   மதியை நல் வழியில் செலுத்திட

8. பல ஊத்தைகள் வரும் பலதுவாரம் கொண்ட
   பிறவிகள் எடுத்து அலுக்காமல்
   பலன் பெறவே மனிதன்! விவேகத்தினாலே
   தன்னையுணர்ந்து பிரம்மானந் தமாய்.

9. சாதுக்களுடன் கூடியிருந்தால்
ஆசை நீங்கி விவேகமுண்டாகும்
சாதுவின் கருணையால் பிறவிப் பிணி நீங்கி
பிறவாமுக்தி பெறலாமே.

10. தெய்வ பக்தியுடன் அறநெறி வழி வந்து
சினம் நீங்கப் பெற்று நான் எனும் அகந்தை நீங்கி
மெய் பேசும். தன்மையுடன். ஒருமை மனம் கொண்டு
இருக்கும் சாதுக்களுடன் இணக்கங் கொண்டு நீ

11. யௌவனத்தில் காமம் வந்தடையும்
பணமுள்ளோன் பக்கம் கூட்டம் சேரும்
கவலைக்குக் காரணம் பந்த பாசம்
அக்ஞானத்தின் இருப்பிடம் சம்சாரமென்றே

12. செல்வமும் வறுமையும் மாறிவருவதால்
செல்வம் கண்டு செருக்கடையாதே
செல்வத்தால் எதையும் பெறமுடியாததால்
மனத்தையடக்கி மாயையை ஓட்டி

13. ஆசை மிகுந்து ஆத்ம ஞானத்தை மறந்து
அல்லற்படாமல் முக்தி பெற்றிட
ஓசையடங்கு முன்னே உலகபற்றினை விட்டு
உன்னடி சேரும் எண்ணம் மிகக் கொண்டு

கோவிந்தனை நினை மூடமனமே
கோவிந்தனை துதி எப்போதுமே

## 1. நாரதர் வியாசருக்குக் கூறல்:

ப. வேதத்தை நான்காக்கி பாரதம் எழுதியும்
நிம்மதி யின்றி தவித்தார் வியாசர்

அ.ப. வேதனை தீர ஹரியின் லீலைதனை
விரித்திட கூறினார் நாரத முனிவர்

ச.ம் முன் பிறவியில் நான் அரியின் கதை கேட்டு
மிகவும் பக்தியாய் ஹரி நாமம் கூறினேன்
என்தாய் இறக்க நாரணன் அருளால்
மஹதி வீணை மீட்டும் நாரதரானேன்.

## 2. உத்தரையின் கர்ப்பம் காத்தல்:

ப. துரியோதனன் தொடையில் பீமன் அடித்ததால்
த்ரௌபதி குழந்தைகளை வெட்டினான் குருபுத்ரன்

அ.ப. பரிவுடனே அவன் முடியை மட்டும் வெட்டி
பாங்குடன் பாண்டவர் அரசாண்டனரே

ச.ம். உத்தரை கர்ப்பத்தை அழிக்கவே குருமகன்
அஸ்திரம் ஒன்றை அனுப்பி வைத்தான்
அத்தரு ணமே சுதர்சனத்தின்
சோதியில் அஸ்திரத்தை அழித்தான் கண்ணன்

## 3. தரும புத்திரனில் வருத்தம்:

ப. யாத்திரையினின்றும் திரும்பிய விதுரன்
அண்ணனுடனே கானகம் சென்றான்

அ.ப. மூத்தோர் மறைவினால் வருந்திய தர்மரிடம்
நாரதர் தோன்றி விவரம் சொன்னார்

ச.ம. விதுரருடன் சென்ற பெரிய தந்தை
காந்தாரியுடன் இறந்ததையும்
யதுவம்சத்திலே கண்ணன் உள்பட
யாவரும் அழிந்ததையும் அறிந்து கொண்டார்

## 4. யாதவகுல மழிதல்:

ப. பெண் வேடம் பூண்ட பையனுக்கு குழவி
என்ன பிறக்கும் என்று யாதவர் கேட்க

அ.ப. கண் சிவந்த முனியும் குலத்தை நசிக்கும்
(ஓர்) உலக்கை பிறக்கும் என்று சபித்தார்

ச.ம் யாதவரனைவரும் கண்ணன் திட்டப்படி
ஒருவரை ஒருவர் அடித்து மடிந்தனர்
மாதவனும் தன் பணி முடிந்ததால்
விண்ணுலகே கினதைச் சொன்னான் காண்டீபன்

## 5. பரீக்ஷித்து பட்டம் பெறல்:

ப. அரசை பரீக்ஷித்துக்கு அளித்து பாண்டவர்கள்
காவியுடை உடுத்து வட திசை சென்றனர்

அ.ப. அரசனும் நீர்வேண்டி ஓர்முனியைக் கேட்க
பேசாத முனிகழுத்தில் செத்த பாம்பை மாலையிட்டான்

ச.ம. கோபமாய் முனிகுமாரன் தந்தைக்கு தீது செய்தோன்
ஏழாம் நாள் தக்ஷன் தீண்டி இறந்திட சாபமிட்டான்
சாப மறிந்த பிதாவும் வருந்த
மன்னனும் தன் உயிரை மாய்த்திட எண்ணினான்

## 6. சுகர் பரீஷித்துக்கு பாகவதம் கூறல்:

ப. பட்டினி கிடந்து உயிரை விடச் சென்ற
பரீக்ஷித்துக்குச் சுகர் அறிவுரை கூறினார்

அ.ப. கட்வாங்கர் கதையை கூறிய பின்பு
பக்தி, முக்தி, சிருஷ்டி முறையினைக் கூறினார்

ச.ம் ஹரியின் அவதாரங்கள் வரிசையாய் சுகர் கூற
ஆனந்தமுடனே பரீக்ஷித்தும் கேட்டார்
ஹரியே இதனை பிரம்மனுக்கு கூற
பிரம்மன் நாரதருக்கு கூறியதாய்ச் சொன்னார்.

## 7. ஹரியின் அவதாரங்கள்:

1. ஹரியின் அவதாரம் சொல்லிடுவோம்
   ஹரியை நாம் தினம் வணங்கிடுவோம்

2. வராகவதாரத்தில் பூமியை ஹரி
   தூக்கி ஹிரண்யாக்ஷனை வதைத்தார்

3. யக்ஞாவதாரந்தன்னில் ஹரியும்
   தேவர்களையுண்டாக்கினார்

4. கபிலாவதாரந்தன்னில் ஹரி தாய்க்கு
   தத்துவ உபதேசம் செய்தாரே.

5. தத்தாத்ரேய அவதாரந்தன்னில் ஹரி
   அத்ரி முனிவர்க்கு மகனாய் பிறந்தார்.

6. குமாரவதாரம் செய்து ஹரியும்
   ஆத்மஞானத்தை எடுத்துரைத்தார்.

7. நாராயணவதாரந்தனில் ஹரி
   துருவனுக்கு அழியா இடம் தந்தார்.

8. ப்ருது அவதாரந்தன்னில் ஹரி வேனனை
   மீட்டு புவியை பசுஊனக் கறந்தார்

9. ரிஷப யோகி யவதாரத்தில் ஹரி ரிஷபராய்
   பிறந்து பரம ஹம்ஸரானார்

10. ஹயக்ரீவன் அவதாரந்தன்னில் ஹரியும்
    பொன்னிற மேனியுடைய வரானார்

11. மத்ஸ்யாவதாரந் தன்னில் மறையை ஹரி
    மீனாகி கவ்வியே காத்தார்

12. கூர்மாவதாரந் தன்னில் ஹரி மலையை
    கடலில் மூழ்காமல் காத்திட்டார்

13. நரஸிம்மாவதாரந் தன்னில் ஹரியும்
    முதலையிடமிருந்து கரியைக் காத்தார்

14. வாமனாவதாரந்தன்னில் ஹரியும்
    பக்தியோகத்தை தெரிவித்தார்

15. தன்வந்த்ரி அவதாரந்தன்னில் ஹரியும்
ஆயுர் வேதத்தை அளித்தாரே

16. பரசுராமர் அவதாரத்தில் ஹரி
க்ஷத்ரியர்களை ஒழித்தாரே

17. ராமாவதாரந்தன்னில் ஹரியும்
மனிதராய் நடந்து காண்பித்தாரே

18. கிருஷ்ணாவதாரந்தன்னில் ஹரியும்
செய்தற்கரிய செயலைச் செய்தார்.

## 8. வராகவதாரம்:

ப. கடலில் அமிழ்ந்த புவியை ஹரியும் தன் மூக்கினின்றும்
வராகனை வரவழைத்து கொம்பால் புவியைத்தூக்க

அ.ப. கடவுளை வழிபட வந்த முனிகளை
தடுத்த இருவரும் பெற்ற சாப பலனாலே

ச.ம். திதியின்வயிற்றில் அரக்கர் இருவராய்
பிறந்து யாவரையும் துன்புறுத்தினார்
முதியவன் இரண்யாக்ஷன் கடுமையாய் போரிட
காதின் அடியில் ஹரி தட்டியதும் மாண்டான்.

## 9. கபிலர் தாய்க்குச் செய்த உபதேசம்:

ப. கர்தமமுனிவர் கடுந்தவம் புரிந்து
கடவுளின் காக்ஷி பெற்றிட்டான்.

அ.ப. கர்தமரும் தமக்கு மணம் புரிந்திட
அழகிய பெண்ணை வரமாய் கேட்டார்.

ச.ம். தேவஹூதியை மணம் செய்து கொண்ட
கர்தமர் ஹரியையே மகனாக பெற்றார்
தேவஹூதிக்கு தன் மகன் கபிலன்
பக்தி யோகத்தை உபதேசித்தார்.

## 10. தக்ஷன் செய்த வேள்வி:

ப. மரியாதை செய்யாத மருமகன் சிவன் மேல்
மாளாத கோபம் கொண்டான் அயன் மகன் தக்ஷன்

அ.ப. பெரிய யாகத்திற்கு அழைக்காமலே ஸதியும்
அரனிடம் அடம் செய்து பிதாவில்லம் சென்றாள்.

ச.ம். தன்னையும் ஏற்காமல் பதிக்கும் அவிர்பாகம்
அளிக்காத தந்தை உயிர் நீக்கினாள் ஸதி
தன் சடையினின்றும் வீரபத்ரனையுண்டாக்கி
யாகத்தை நிர்மூலமாக்கினார் சிவன்.

தேவர்கள் இறைஞ்ச சிவனும் மனம் கனிந்து
ஆட்டின் தலையுடன் தக்ஷனை எழச் செய்து
தேவரனைவரும் முன்போல் எழுந்திட
ஸதி ஹி மவான் மகளாய் சிவனை யடைந்தாள்.

சோதரன் யக்ஷரால் இறந்ததால் துருவன்
கோரமாய் வீரப்போர் புரிந்தான்
சோதரன் இறந்தது விதியென்று சொல்லி
பாட்டன் போரை நிறுத்திடச் சொன்னான்.

அரியின்நினைவு எப்போதும் இருந்திட
குபேரனிடம் வரம் பெற்றான்
அரி அனுப்பிய விமானந்தன்னில்
விஷ்ணுபதத்தை யடைந்தானே.

## 11. துருவசரித்திரம்:

ப. சிறுவன் துருவனும் மாற்றாந்தாய் சொல்தைக்க
ஹரியைக் காணவே கடுந்தவ மியற்றினான்

அ.ப. சிறுவன் முன் ஹரி தோன்றி சங்கினால் கன்னம்தொட
ஞானம்பெற்று ஹரியைதுதித்திட லானான்.

ச.ம். ஹரியும் ஆனந்தமுடன் சப்த ரிஷி மண்டலத்தின்
மேலுள்ள தன்னிடம் அடைவாயென்றார்
ஹரி சொன்னபடி பல்லாண்டு அரசாண்டு
பத்ரியில் தவம் செய்து விஷ்ணுபதமடைந்தான்.

## 12. பிருதுவின் வரலாறு:

அங்கனும்தன் மகன் வேனனுடைய
அக்ரமம் தாங்காமல் எங்கோ மறைந்தான்

அ.ப. அங்கனுக்குப்பின் அரசாண்டவேனன்
அனைவரையுமே ஆட்டிப் படைத்தான்.

ச.ம. வேனனின் இருகையை குடைந்ததில் முனிவர்கள்
ஆண்மகனும் பெண்ணும் வந்திடக்கண்டனர்
வானவர் அனைவரும் ஆயுதபலம்தர
விமரிசையுடனே யவன் அரசை ஏற்றான்.

2. பஞ்சத்திற் காளாகி படும் வேதனை தீர
பூமியை எதிர்க்க பூமியும் பசுவாகி
தஞ்சமடைந்து வேண்டியதந்து
பிருதுவின் மகளாய் ஏற்கப்பட்டாளே.

3. பயந்த இந்திரன் பிருதுயாகக் குதிரையை
இருமுறை திருடிச் சென்றான்
அயன் வேண்ட யாகம் நிறுத்தி ப்ருதுவும்
ஹரி நாமம் கேட்டிட பத்தாயிரம் செவி பெற்றான்.

## 13. பிரசேதர்களின் பெரும் தவம்:

ப. பிருதுவின் பேரன் பர்ஹி ஷத்திற்கு
பத்து மகன்கள் பிறந்தனரே

அ.ப. பிரசேதசர்கள் என்று அழைக்கப்படும் மகன்கள்
தவமி யற்றிடவே கானகம் சென்றனர்

ச.ம். தவத்திற்கு சென்றோர்க்கு தடாகம் தென்பட்டு
அதனில் சிவபெருமான் காக்ஷி தந்தார்
சிவனும் அரியின் தோத்திரம் ஓத
அதனைச் சொல்லி நீரில் தவமியற்றினரே.

2. அரியும் அவர்கள் முன் தோன்றி தேவ
மாதாவினால் கை விட்டகன்னியை மணக்க சொல்லி
அரிபக்தி தொடர்ந்திட வரமும் தந்து
பரம பதமும் அடைந்திடச் செய்தார்.

## 14. புரஞ்சனன் கதை:

ப. சுகம் வேண்டியலைந்த புரஞ்சனனுக்கு
இமய மலையில் இடமும் பெண்ணும் கிடைத்தது.

அ.ப. சகலமும் அவளே என்றிருந்தவனுக்கு
சலிப்புடன் முதுமையும் ஒருங்கே வந்தது.

ச.ம். கந்தர்வராலும் யவனர்களாலும்
பதவி நீக்கப்பட்டு தவித்தான் புரஞ்சனன்
அந்த நாள் யாகத்தில் கொன்ற பசுக்களவனை
முட்டி முட்டியே தாக்கிற்று.

2. மறு ஜன்மத்தில் பாண்டியன் மனைவியாய்
உடன் கட்டை ஏறுகையில் அந்தணனாய் வந்து
உறுதியுடன் அவன் துணையன்னமானது
உபதேசம் செய்ய தான் யாரென்றறிந்தான்.

## 15. ரிஷபதேவர் கதை:

ப. பரந்தாமன் ரிஷபன் என்னும் பெயருடன் நாபிக்கும்
மேருவுக்கும் மகனாய்ப் பிறந்தாரே

அ. பரதனுக்கு அரசை ஈந்து சகல
ஜீவனும் ஒன்றென்று விளக்கினார்

ச.ம். துறவற வாழ்க்கையை, விரிவாய் விளக்கி
காட்டுத் தீக்கு ரிஷபர் இறையானார்
துறவிகளெல்லாம் ப்ரியவ்ரதன் வம்சத்தில்
பரமனே தோன்றியதை பலவாறாய் புகழ்ந்தனர்.

## 16. ஜடபரதர் சரிதம்:

ப. அரசை மக்கட்கீந்து பரதனும் காட்டில்
தாயற்ற மான்குட்டி நினைவாய் மாண்டான்

அ. பரதனும் மானாய் பிறந்து தன் தவறுணர்ந்து
மறு பிறவியில் ஓர் அந்தணன் மகனானான்

ச. அரியை நினைந்து அறிவிலி போல் காட்சி தந்து
அந்தணனை காளிக்கு பலியிட அழைத்துப் போக
பரிவுடன் காளியும் வாளைப்பிடுங்கியே
அனைவரையும் வெட்டி அந்தணனைக் காத்தாள்.

## 17. ஜடபரதரும் ரஹூகுணனும்:

ப. பல்லக்கை சரிவர தூக்காத பரதனை
ஏசின அரசனுக்கு நில்லாமலே

அ. நில்லாமையான உலகதத்துவத்தை
நீக்கமறவே விளக்கினான் பரதன்

ச. உண்மையறிந்தவுடன் அரசனும் கீழிறங்கி
வணங்கி பரதனிடம் மன்னிப்பு கோர
மண்ணாலான இம் மாயப் பிரபஞ்சத்தை
மன்னனும் உணர மனமுவந்தே உரைத்தான்.

## 18. அஜாமிளன் சரிதம்:

ப. சீரான அஜாமிளனும் சீரழிந்த பின்
யமதூதர்கள் அவனை எடுத்துச் செல்லவந்தனர்

அ. நாராயணா! என்று மகனை அழைக்க
ஹரி தூதர் யமதூதரை விரட்டினரே.

ச. ஹரியே யாவரினும் பெரியவர் என்று
யமனும் தன் தூதருக்கு எடுத்துரைக்க
ஹரித்வாரம் சென்று கடுந்தவம் செய்தபின்
அஜாமிளன் வைகுண்டம் அடைந்தானே

## 19. வ்ருத்ராசுரவதம்:

ப. குருவை அவமதித்து பலம் குறைந்த இந்திரன்
அயன்சொல்லால் விச்வரூபனை குருவாய் கொண்டான்

அ. குரு பதவி ஏற்று 'நாராயண கவசம்'
என்ற மந்திரம்தனை இந்த்ரனுக்கு ஓதினார்

ச.1. மந்திர பலத்தால் இழந்த பதவி
திரும்பவும் பெற்று மகிழ்ந்தான் இந்திரன்
தந்திரம் செய்த குருவின் மூன்று
தலைகளை வெட்டி பாபம் ஏற்றான்.

2. மகனைக் கொன்றவனை அழித்திடவே ஓர்
அசுரனை உண்டாக்கி அழித்திட ஏவினான்
ஜகந்நாதன் சொற்படிததீசி எலும்பால் செய்த
வஜ்ராயுதத் தாலே விருத்திகனைக் கொன்றான்.

3. பாபமும் இந்திரனை பலவிடங்களிலும்
பலவிதமாக வாட்டிற்று
பாபம் தீரவே தாமரைத் தண்டடியில்
ஆயிரம் ஆண்டு அரிநாமம் சொல்லி மீண்டான்.

## 20. சித்ரகேதுவின் கதை:

ப. முனி அருளால் பிறந்த சித்ரகேதுவின் மகன்
சிற்றன்னைகளாலே இறக்கப்பட்டான்

அ. கனிவுடன் மன்னனுக்கு பந்த பாசமகல
முனியும் பிள்ளை மூலம் உபதேசித்தாரே

ச. முனி உபதேசத்தால் ஆதி சேடனைக் கண்டு
அறிவுரையும் கேட்டு ஆனந்த பவனி வர
பனிமலை நாதனை பார்த்து சிரித்ததால்
பார்வதி சாபமிட அசுரனாய் பிறந்தான்.

## 21. இரண்ய கசிபுவின் தவம்:

ப. தம்பி இறந்ததால் அரி மீது கோபம் கொண்டு
இரண்யகசிபுவும் கடுந்தவம் புரிந்தான்.

அ. தம் முன்னே தோன்றிய பிரம்மாவிடம் ஹிரண்யன்
சாகாவரம் பெற திட்டம் வகுத்தான்

ச. மானிடர் தேவர் விலங்குகளாலும்
காலை மாலை இரவு வேளைகளிலும்
வானிலும் மண்ணிலும் தன் உயிர் பிரிய
கூடாதென்ற வரம் கேட்டு பெற்றான்.

## 22. பிரகலாதன் சரிதம்:

ப. இரண்ய கசிபுவின் எதிரி அரியையே
மகன் பிரகலாதனும் ஏற்றிப் போற்றினான்.

அ.ப. அரசனும் மகனை பல வழியில் கொல்ல
சதி செய்தும் அரிகிருபையால் பிழைத்து எழுந்தான்

ச. தந்தை தவம் செய்ய தாயை இந்திரன் தூக்க
நாரதரும் தடுத்து பக்தி யோகம் தாய்குரைக்க
அந்த சமயம் கருவாயிலிருந்து
கேட்டதை நண்பர்கட்கு உரைத்தான் பிரகலாதன்.

## 23. நரசிம்ம அவதாரம்:

ப. நண்பர்கட்கு ரைத்ததை குரு தந்தையிடம் கூற
தூணில் உள்ளானா அரி என்று கோபித்துக்குத்த

அ. கண் முன்னே சிங்கமுக மனிதனாய் அரியும் தோன்றி
மடி மீது வைத்து அரக்கனை கொன்றார்.

ச. பயந்த தேவர்கள் ப்ரகலாதனையே
அரியை சாந்தப் படுத்த வேண்டினரே
பயமின்றி வணங்கிய மகனை எடுத்து
வரமேதும் கேட்காத நிலையினைத் தந்தார்.

## 24. கஜேந்திர மோக்ஷம்:

ப. முதலைப் பிடியினின்று தப்ப முடியாமல்
ஆதிமூலமே! என்று அலறியது கரி

அ. கதறலைக் கேட்டகணமே அரியும்
சக்ரத்தால் முதலை கழுத்தையறுத்தான்.

ச. முனிவர் சாபத்தினால் முதலையான கந்தர்வனும்
அகஸ்த்தியர் சாபத்தால் கரியான பாண்டியனும்
கனிவுடன் அரியை வணங்கி தங்கள்
இருப்பிடம் சென்று மகிழ்ந்தனரே.

## 25. கூர்மா அவதாரம்:

ப. இந்திரன் பெற்ற சாபத்தினால்
தேவர் அனைவரும் தவித்தனரே

அ. தந்திரமாய் அரியும் அசுரர்களுடன் சேர்ந்து
பார்கடலை கடைந்து பயனடைவீர் என்றார்.

ச.1. அரியின் தயவால் மந்தர மலையை
கடலிலிட்டு பின் வாசுகியை சுற்றி
அரியுடன் தேவர்களும் அசுரர்களும் கூடி
அமுதம் பெற்றிடவே கடலைக் கடைந்தனர்

2. கடலைக்கடையும் போது மந்தர மலையும்
பூமிக்குள் அமிழ்ந்ததால் கவலைகொண்டனரே
உடனே அரியும் ஆமை வடிவம் கொண்டு
முதுகில் மலையை தாங்கி நின்றாரே.

3. கடலினின்றும் வந்த கடும் விடத்தினால்
கலங்கி சிவனிடம் ஓடி வந்தனரே
உடனே விடத்தை வாரி வாரியுண்டு
நீலகண்ட சிவனாய் மாறினாரே.

4. வரிசையாய், பசு, குதிரை, யானை, கௌத்துப மணியும்
பாரிஜாத மரமும் வந்தனவே
அரியின் மார்பில் அமர்ந்திடவே
ஸ்ரீ மகாலக்ஷ்மியும் வந்தனளே

## 26. மோகினி அவதாரம்:

ப. அமுதத்தை பறித்துக் கொண்டு அசுரர்கள் ஓட
அரியும் அழகிய பெண்ணுரு கொண்டார்

அ. அமுதத்தை சமமாக அனைவர்க்கும் இடுவதாய்ச்
சொல்லி கலசத்தை தானே பெற்றார்

ச.1. சிவனும் மயங்கிய அழகில் அசுரர்களும்
மயங்கி அமுதைத்தந்து ஏமாந்தனரே
தேவ வேடத்தில் ராகு உண்பதை
கண்ட அரிவெட்ட தலை மட்டும் பிழைத்தது.

2. காலநேமியும் அரியால் மாள ஜாம்பனைக் கொன்ற
இந்திரனும் நமுச்சைக் கொல்ல முடியாமல்
நீலக்கடலின் நுரைதனைக் கொண்டு
அசுரனைக் கொன்றபின் போரை நிறுத்தினான்.

## 27. வாமன அவதாரம்:

ப. தோற்ற பலி வேள்வியில் பொன் தேர்வில் அம்புடனே
வாடாமல்லி மாலையும் பாட்டனிடம் பெற்றார்.

அ. ஏற்றமுடன் பலி மூவுலகம் வெல்ல
அதிதியும் மக்கட்காக அரியை வேண்டினார்.

ச.1. அதிதிக்கு பிறந்த அரி சங்கு சக்ரம் தரித்த
நான்கு கைகளை உடைத்தானாயிருந்தான்
அதி சீக்கிரத்தில் அந்தண சிறுவனாய்
மாற பெற்றோர் கண்டு அதிசயித்தனரே.

2. அச்வமேத யாகம் நடக்கும் இடத்தில்
அந்தணச் சிறுவன் மூன்றடிநிலம் கேட்க
அச்சமயம் குரு சுக்ரன் தடுக்க
வழியின்றி பலியும் வாக்கு கொடுத்தான்

## 28. உலகளந்த உத்தமன்:

ப. சொற் கேளாத பலி குருவின் சாபத்துடன்
மனைவி நீர்வார்க்க நிலதானம் செய்தான்.

அ. சிற் பாதத்தினன் பூமியை ஓரடியாய்
விண்ணை ஓர் அடியாயும் அளந்த பின் சிறுவனானான்

ச. பலி சொல்படியே மூன்றாவதடியை
தலையில் வைக்க அரியை வேண்ட
பலியும் அருள் பெற்று செல்வமிழந்து
சுதல லோகத்தை யடைந்து ஆண்டானே.

## 29. மத்ஸாவதாரம்:

ப. ராஜரிஷி கையில் அகப்பட்ட மீனும்
நாளுக்கு நாள் மிகப் பெரிதாயிற்று

அ. ராஜனும் மீனை ஹரியென்றே நினைந்து
மீனான காரணத்தை கூறுமெனக் கேட்டான்

ச.1. பிரளயத்தில் பாம்பினால் கட்டப்பட்ட படகில்
விதை மூலிகையுடன் ஏழு முனிவர் வர
அரசனும் தங்கத்திமிங்கிலத்தின் கொம்பில்
படகைக் கட்டி பார்த்திருந்தான்.

2. அயனின் வாயினின்றும் மறைகள் வெளிவர
குதிரை முகம் கொண்ட அசுரனான
அயக்ரீவன் திருட அரியும் மீனாகி
அசுரனை வதம் செய்து மறையை மீட்டான்.

## 30. சூர்யவம்ச கதைகள்:

மனுவின் புத்ரி இலாவின் கதை

ப. தவத்தால் பிறந்த இலா அரியின் மகிமையால்
ஸத்யும்னன் என்னும் ஆணாக மாறினான்

அ. சிவனும் ஸதிக்கு கூறிய காட்டிற் சென்று
ஸத்யும்னன் பெண்ணாகி புதனிடம் பிள்ளை பெற்றான்

ச. குரு வேண்ட சிவனும் மனமிரங்கியே
ஒரு வாரம் ஆணாகவும் ஒரு வாரம் பெண்ணாகவும்
இருந்திடச் செய்தும் மக்கள் ஏற்காததால்
அரசை மகனுக்கீந்து கானகம் சென்றான்

## 31. சுகன்யாவின் கதை

ப. தவறாக கண்களை குத்தியதால்
முனியை மணம் செய்து கொண்டாள் சுகன்யா

அ. தேவவைத்யருடன் குளத்தில் மூழ்கியதால்
அழகிய குமாரனாய் மாறிவிட்டார் முனி

ச. தேவவைத்யர்களுக்கு மாமன் நடத்திய
யாகத்தில் முனியும் ஸோம பங்கைத்தர
தேவராஜனும் வஜ்ரத்தால் அடிக்க
எடுத்த கையை முனி அசையாமல் செய்திட்டான்.

## 32. நாபாகன் கதை

ப. குருகுலம் செய்து திரும்பிய நாபாகன்
குடும்ப பாகமின்றி மனம் நொந்தான்

அ. பெரும் பொருளை பெற தந்தையும் வேள்வியின்
ஆறாம் நாள் மந்திரத்தை அந்தணர்க்கோதென்றார்

ச. பெற்ற பொருளை சிவன் தனதென்று சொல்ல
தந்தையும் அதனை ஆமோதிக்க
பெற்றதை சிவனிடம் திருப்ப மனம் குளிர்ந்து
சிவன் மந்திரம் ஓதி பொருளையும் தந்தார்.

## 33. அம்பரீஷன் கதை

ப. துவாதசியன்று அம்பரீஷ மன்னன்
துர்வாசரை தன்னுடன் உண்ண அழைத்தான்

அ. துவாதசி முடியும் நேரமாகியதால்
குரு சொற்படி மன்னன் நீர் மட்டும் அருந்தினான்

ச. கோபத்தில் முனி ஏவிய பேயை எரித்த சக்ரம்
துர்வாஸரையும் அழிக்கதுரத்திற்று
தாபமுடன் முனி ஹரியை வேண்டியும்
தணியாத சக்ரம் மன்னன் வேண்டதணிந்தது

## 34. ஸௌபரி முனிவர் கதை

ப. ஆண் பெண் மீன்கள் விளையாடக் கண்ட
ஸௌபரி முனிவர் மணம் புரிய ஆசை கொண்டார்

அ. காண்போர் மயங்கும் கட்டழகனாய் மாறி
ஐம்பது அரச கன்னிகளை மணந்தார்

ச. ஐம்பது பேருடனே ஆனந்தமாக
காலங் கழித்து அலுத்து சலித்து
தம் நிலைக்கு வருந்தி உதறி தவம் செய்ய
காட்டிற்கு திரும்பவும் ஏகினாரே

## 35. அரிச்சந்திரனும் சுனச்சேபனும்

ப. மகன் பிறந்தால் பலி இடுவதாய் வருணனை
வேண்டி மகனைப் பெற்றான் அரிச்சந்திரன்

அ. மகனை பலிதர மனமின்றி மன்னன்
நாளை கடத்திக் கொண்டு போனானே

ச. மகன் காடு ஏக தந்தைக்கு மகோதரம் வர
மகன் நாடு திரும்பாமல் இந்திரன் தடுக்க
மகனும் 'சுனச்சேபனை' தனக்கு பதிலாய்தர
பலியிடாதவாறு காத்தார் விச்வாமித்ரர்

## 36. சகரன் வேள்வி

ப. சகரனின் யாகக் குதிரையைத் திருடி இந்திரன்
கபில முனிவரின் பக்கம் வைத்தான்

அ. சகரனின் புதல்வர்கள் குதிரையைத் தேடிச்சென்று
திரும்பாமல் எரிந்து போயினரே

ச. அம்சுமான் என்ற சகரனின் பேரன்
கபிலரைக் கண்டு வணங்கி விவரம் சொல்ல
தம் முன்னோர்கள் கங்கை நீர் பட்டால் பிழைப்பார்
எனத் தெரிந்து குதிரையை கொண்டு வந்தார்

## 37. பாகீரதி வருதல்

ப. அம்சுமான் பேரன் பகீரதன் கங்கையை
வரவழைக்க கடுந்தவமியற்றினான்

அ. தம் வேகத்திற்கு பயந்த கங்கைக்கு
சிவனை வேண்டுவதாய் கூறினான் பகீரதன்

ச. பாபத்தைப் பற்றி பயந்த கங்கைக்கு
பற்றற்ற பேர்கள் ஹரிக்குச் சமானமென்றான்
பாபம் யாவும் அழிந்து போகும் என்று
சொல்லி கங்கையை பகீரதன் வேண்டினான்

## 38. சவுதாச மன்னனின் கதை

ப. தம்பியை கொன்றதால் கோபித்த அரக்கன்
சவுதாச மன்னனின் சுயம்பாகியானான்

அ. வம்பு செய்திடவே வசிஷ்டருக்கு
மாமிச உணவை பரிமாறினான்

ச.1. அரக்கனாகிட சபித்த குருவும்
உண்மையறிந்த பின் சாபத்தை குறைத்தார்
இரக்கமின்றி அந்தணனை தின்றதால்
அவன் மனைவி சாபத்தையும் பெற்றானே

2. சாபத்தை அறிந்த குரு மன்னன் மனைவிக்கு
தானே ஓர் கர்ப்பம் கொடுத்தார்
தாபத்துடன் குரு தயவு காட்ட
ஏழு வருடத்திற்குப் பின் அஸ்தமகன் பிறந்தான்

3. அஸ்தமகனின் மைந்தன் பரசுராமனிடமிருந்து
நாரீ மணிகளால் காக்கப் பட்டவன்
விஸ்வாசமாய் கட்வாங்கனை தேவர்கள் வரம் கேட்க
அரி பக்தியை பெற்று பரம பதம் அடைந்தான்

## 39. தசரதர் முற்பிறவி

ப. தசரதர் முற்பிறவியில் ஆயிரம் துளசிகொண்டு
அர்ச்சனை செய்யும் அந்தணராயிருந்தார்

அ. அசதியுண்டாகியும் தொடர்ந்து பூஜை செய்ய
ஆலயத்தினிலோர் அழுகைக் குரல் கேட்டது

ச. அரியிடம் அந்தணனும் அவனைக்காக்கச் சொல்லி
அனைத்து புண்யத்தையும் அவருக்கே தருவேனென்றான்
அரியும் மகிழ்ந்து அடுத்த பிறவியில்
தசரதனான உந்தன் மகனாவேன் என்றார்

## 40. தசரதர் வேள்வியும் குழந்தைகள் பிறப்பும்

ப. குருவின் சொற்படி வேள்வி செய்த பின்
ஓமகுண்டத்தில் பாயசம் வந்தது

அ. கருத்தரித்திடவே பாயசந்தன்னை
மனைவியர்க்களித்தான் தசரத மன்னன்

ச. கௌசல்யைக்கு ராமனும்
கைகேயிக்கு பரதனும்
சத்ருக்னன் லக்ஷ்மணனும்
சுமித்திரைக்குப் பிறக்க!
ஸௌஜன்யமாகவே அனைவரும் ஒன்றாய்
அரண்மனையிலே ஆனந்தமாயிருந்தனர்

## 41. விஸ்வாமித்ரருடன் ராமலக்ஷ்மணர் கானகம் ஏகுதல்

ப. மன்னன் தசரதனிடம் விஸ்வாமித்ரர் சென்று
யாகத்தை தடை செய்யும் அரக்கரை கொல்ல

அ. தன் மகனைக் கேட்க பயந்தவனுக்குப் பதில்
சேனை முழுவதையும் தருவதாய்ச் சொன்னான்

ச. குரு வஸிஷ்டரும் ராமனுக்கு மணம் செய்யவே
முனி வந்துள்ளார் என சமாதானம் கூற
இரு குமாரர்களையும் உடனே முனியுடன்
அனுப்ப தசரதர் சம்மதித்தார்

## 42. தாடகை வதம், அகலிகை சாபம் நீங்கல்

ப. மாரீசன் தங்கையைக் கொன்று முனியின் வேள்வியை
இனிதே முடித்தான் ஸ்ரீ ராமன்

அ. நாரீசீதையின் சுயம்வரத்திற்காக
மிதிலைக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்றார்முனி

ச. ராமனுடைய பாததூசி பட்டு
கல்லாகி மாறியவள் பெண்ணாக மாறினாள்

ராமனை வாழ்த்தி கௌதம முனியும்
தன் மனைவியை அழைத்துச் சென்றார்.

## 43. ஸ்ரீ ராமன் சிவதனுசை ஒடித்தது

ப. நந்தவனத்தில் பார்த்த ராமனே
வந்து மாலையிட விரும்பினாள் சீதை

அ. சிந்தையில் கர்வமுடன் வந்த ராவணனும்
வில் தூக்க முடியாமல் சென்று விட்டான்

ச. முனி ஆணை செய்ய ராமனும் சென்று
வில்லை ஒடித்து வெற்றிமாலை சூட
கனிவுடன் ஜனகன் தசரதனுக்கு
கலியாண அழைப்பை விடுத்தானே

## 44. கைகேயி இருவரம் பெற்றது

ப. யாவரும் ராமனுக்கு நாளைய தினமே
பட்டாபி ஷேகம் செய்ய நிச்சயித்தனரே

அ. பாவி கூனி மந்தரை கைகேயி மனதை
கெடுத்து தன் சொற்படி ஆட்டி வைத்தாள்

ச. பரதனுக்கு நாட்டையும் பதினான்கு வருட
வனவாசம் ராமனுக் கென்றும் தசரதனிடம்
வரம் கேட்கவே தலைவிரி கோலமாய்
சண்டையிட்டு இருவரம் பெற்றாள் கைகேயி

## 45. ஸ்ரீ ராமனின் வனவாசம்

ப. தம்பியும் தாரமும் தானே உடன் வர
தசரதனை வணங்கி வனம் சென்றான் ராமன்

அ. தம்பியைப்போல அன்புடன் படகோட்டி
குகனும் ராமனுக்கு துணையானான்

ச. பரத்வாஜர் ஆஸ்ரமத்தில் வால்மீகியைப் பார்த்து
அவர்கதையையும் கேட்டு சித்ர கூடம் சென்றான்
பரந்தாமன் அருளால் அத்ரிமுனிவரின்
ஆச்ரமத்தருகில் கங்கை நீர் வந்தது.

## 46. தசரதன் உயிர் பிரிதல்

ப. தசரதர் சுமத்ரரிடம் ராமனின் க்ஷேமத்தை
அறிந்து ராமா! ராமா என்று அலறினார்

அ. தசரதரும் தனக்கு புத்ரசோகத்தால்
மரணம் வரும் என்று சாபமுள்ளதென்றார்

ச. மனைவி பேச்சைக் கேட்டு மகனை காட்டிற்கு
அனுப்பியதற்காக தன்னை நொந்து கொண்டார்
அனைத்தையும் கூறி ராமா! ராமா! என்று
அலறியே உயிர் நீத்தார் தசரத மன்னன்

## 47. கேகய நாட்டினின்று பரதன் வருகை

ப. குருவின் சொற்படி கேகய நாட்டினின்றும்
பரதனும் சத்ருக்னனும் அயோத்தி வந்தனர்

அ. வரும் வழியில் பல அபசகுனம் கண்டு
தாயிடம் நடந்த விபரமறிந்தான்

ச. சினந்த பரதனும் முடியினை ஏற்காமல்
கலங்கி ராமனைக் காண கானகம் ஓடினான்
மனங்கலங்கியே மக்கள் அனைவரும்
பரதனுடனே புறப்பட்டனர்

## 48. நொந்த பரதனுக்கு தந்த ஆறுதல்

ப. படையுடன் பரதன் வருவதைக் கண்ட குகன்
உண்மையை யறிந்ததும் உபசரித்தான்

அ. நடையாக குடில் சென்று ராமனைக்கண்டு
ராஜ்யத்தை ஏற்கச் சொல்லி வேண்டினான் பரதன்

ச. தந்தை சொல் காக்க பதினான்கு வருடம்
சென்றபின் அயோத்திக்கு வருவதாய்ச் சொன்னான்
நொந்த பரதனுக்கு பாதுகை தந்து
ஆறுதுல் சொல்லி அனுப்பி வைத்தான் ராமன்

## 49. சூர்ப்பணகை மூக்கறுபடல் ராவணன் சீதையை எடுத்துச் செல்லல்

ப. சோதரரிடத்தில் ராவணன் தங்கை
காமத்தோடு வந்து மூக்கறு பட்டாள்

அ. வேதனையுடனே சீதையை உனக்காக
கொண்டு வரப் போனதில் நடந்த தீ தென்றால்

ச. மாரீசன் மானாக, சீதை! விரும்ப,
ராமன் வில்லடிக்க, லக்ஷ்மணா! என்று கதறி
மாரீசன் இறக்க, சீதை லக்ஷ்மணனை துரத்த,
தனித்திருந்த சீதையை ராவணன் கொண்டோடினான்

## 50. வாலிவதம்

ப. சீதையை ராவணன் எடுத்துச் செல்வதைத் தடுத்த
ஜடாயுவின் சிறகை வெட்டினான் ராவணன்

அ. பாதை சீர் செய்து பழங்களை முனிவர்க்களிக்கும்
சபரியின் இல்லம் ஏகினர் சோதரர்கள்

ச. வானரன் சுக்ரீவன் கதை கேட்டு ராமன்
வாலியை மறைந்தே வதம் செய்தான்
வானரன் வாலியும் ராமா! என்றேயிறக்க
ராஜ்யத்தை சுக்ரீவன் பெற்றானே

## 51. ராவணனிடம் அனுமான் தூது செல்லல்

ப. ராமன் அனுமானிடம் சீதைக்கு மோதிரம்
தந்து தன் துயரை கூறிடச் சொன்னான்

அ. பீம சோதரன் ஜாம்பவான் மூலம்
சீதை இருப்பிடம் தெரிந்து கொண்டான்

ச. ராமதூதன் என்று சீதையிடம் சொல்லி
இந்த்ரஜித் மூலம் சபை ஏகினான்
காம மேலிட்ட ராவணனும் தூதன்
நற்சொல் கேளாமல் வாலில் தீயிட்டான்

## 52. விபீஷணன் சரணாகதி

ப. சதியிருப்பிடம் தெரிந்ததும் ராமன்
கடற்கரைக்கு வந்திட்டான்

அ. புதிதாய் மணலினால் லிங்கமமைத்து
பூஜையை முறையாய் செய்திட்டான்

ச. புத்தியுரைத்தவனை எட்டியுதைத்ததால்
ராவணன் தம்பி ராகவனை சரணடைந்தான்
சத்தியமாகவே இலங்கையை ராமனும்
விபீஷணனுக்கு முடிசூட்டுவேன் என்றான்

## 53. ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்

ப. ராவணனைக் கொன்று விபீஷணனுக்கு
இலங்கையை முடிசூட்டினான் ராமன்

அ. ஆவலுடன் சீதைக்குதான் பூஜித்த லிங்கத்தை
காட்டி மகிழ்ந்தான் ஸ்ரீ ராமன்

ச. தங்க சிம்மாசனத்தில் சீதா தேவியுடன்
ஸ்ரீ ராமனுக்கு ராஜ்யாபிஷேகம்
பங்கமில்லாமல் தங்கும் மங்களம்
எங்கும் விளங்க நடந்தேறியது

## 54. வண்ணான் ‘சொல் கேட்டல்’

ப. ராமாவதாரத்தில் மானிடரைப் போல்
வாழ்ந்து காட்டினான் ஹரி நாராயணன்

அ. நாமாவச் சொல்லித் தவம் செய்தவனை
தன் கதை எழுத திறன் அளித்தானே

ச. வண்ணான் சொல்லிற்கும் மதிப்பு வைத்துத்தன்
கண்ணான சீதையை காட்டிற்கு விரட்டினான்
கண்மணியாய் இருகுமாரர்களை ஈன்று
தாயான பூமியிடம் சென்று மறைந்தாள்

## 55. நிமி மன்னனின் கதை

ப. இந்திரன் வேள்விக்குப் பின் நிமியின் வேள்வியை
நடத்துவதாய் சொன்னார் வசிஷ்டமுனிவர்

அ. முந்தியே வேறு முனிவர்களைக் கொண்டு
வேள்வி செய்து நிமியை சபித்தார் வசிஷ்ட்டர்

ச. பதிலுக்கு வசிஷ்டரை சபித்த நிமியின்
யாகத்தை முடித்த முனிகள் தேவரை வேண்ட
எதிலும் தனக்கு இச்சை இல்லை என்று
ஹரியின் பாதாரமே வேண்டுமென்றான்

## 56. புரூரவஸுும் ஊர்வசியும்

ப. புதன் மகன் புரூரவஸை ஊர்வசி காதல் கொண்டு
ஆடிரண்டுடனே பூலோகம் தங்கினாள்

அ. சதஸில் காணாத ஊர்வசியைத் தேடி
தேவதூதர்கள் பூலோகம் வந்தனர்

ச. ஆடிரண்டையும் காணாத ஊர்வசி
புரூரவஸையும் திட்டி மறைந்தாள்
தேடின காதலன் முன் தோன்றியவனையும்
கந்தர்வ லோகம் அடைந்திடச் செய்தான்

## 57. பரசுராமர்

ப. பரசுராமன் ஜமதக்னியின் புதல்வன்
வேள்வி செய்ய தொல்லை தருவோரை அழித்து வந்தான்

அ. அரசன் அர்ஜுனன் தந்தையிடம் இருந்த
காமதேனு பசுவைத் திருடிச் சென்றான்

ச.1. அரசனின் ஆயிரம் தலைகளை வெட்டி
அவனை வீழ்த்தி பசுவை மீட்டான்
பரசுராமனும் தந்தை சொல்படியே
தீர்த்த யாத்திரை செய்து பாபத்தை போக்கினான்

2. கந்தர்வனைக் கண்டு அழகில் மயங்கி
நேரம் சென்று திரும்பிய தாயை வெட்ட மறுத்த
சொந்த சோதரனையும் தாயையும் வெட்டி
தந்தை தந்த வரத்தால் பிழைக்கவைத்தானே

3. அர்ஜுனன் மைந்தர்கள் ஜமதக்னி முனிவர்
தவம் செய்கையில் அவர் கழுத்தை வெட்டினார்கள்
கர்ஜனை செய்தே பரசுராமனும்
க்ஷத்ரிய பூண்டை அழித்து வந்தான்

4. தந்தையின் தலையை ஒன்று சேர்த்து
ஈமக்ரியைகள் செய்தான் பரசுராமன்
விந்தையுடனே மகேந்த்ர மலையில்
இன்றும் பரசுராமன் இருந்து வருகின்றான்

## 58. யயாதி

ப. தவறாக குருபுத்ரியின் ஆடையை அரசன் மகள்
அணிந்ததால் கோபம் கொண்ட குருபுத்ரியும் ஏச

அ. அவளும் பதிலுக்கேசி குரு புத்ரியை உடனே
பாழுங்கிணற்றில் தள்ளி விட்டாளே

ச.1. யயாதி கிணற்றினின்றும் தேவயானையைக் காத்து
குரு சொற்படியவளை மணந்து கொண்டு
யயாதியுடனே அரசகுமாரியும்
பணிப் பெண்ணாகவே புறப்படலாச்சு

2. தேவயானைக்கு ஆண் பிள்ளை பிறந்ததும்
சர்மிஷ்டையும் ஓர் மகன் வேண்டி பெற்றாள்
தேவயானையின் தந்தை யயாதியை சபிக்க
மகன் புரூவினால் முதுமை சாபம் நீங்கினான்

## 59. சகுந்தலை

ப. மேனகைக்கும் விஸ்வாமித்ர முனிவர்க்கும் பிறந்த
சகுந்தலை கண்வரால் வளர்க்கப் பட்டாள்

அ. கானகத்தில் வேட்டையாட வந்த துஷ்யந்தன்
காந்தர்வ விவாகம் செய்து கொண்டான்

ச. மணத்தை மறந்த மன்னனும் விண்வாக்கால்
மகன் மனைவியை ஏற்றுக் கொண்டான்
மண வாழ்க்கை வெறுத்த மகன் பரதனுக்கு
தேவர்கள் வியாசரின் மகனைத் தந்தனர்

## 60. ரந்தி தேவன்

ப. ரந்திதேவர்க்கு சிறிதளவு உணவு
கிடைத்த சமயம் புசித்திட எண்ணம் கொண்டான்

அ. வந்துயாசித்த மூவர்க்கும் உணவளித்து
நீரை சண்டாளனுக்கு அளித்து விட்டான்

ச. ரந்தி தேவனின் கொடையில் மகிழ்ந்து
வந்த மூவரும் விரும்பும் வரம் கேட்க
சிந்தை மகிழ்ந்து வரம் பெற மறுத்து
ஹரி நாமம் சொல்லியே ஹரியையடைந்தான்

## 61. பிரம்மனும் பூமாதேவியும் தேவர்களும் மாலிடம் முறையிடல்

ப. பிரம்மன் முதல் தேவர் அனைவரும் கூடி
அரியிடம் தங்கள் முறை கூறச் சென்றனர்

அ. அரசர்களின் படு அக்ரமம் தனையே
அடக்கிடவே ஓர் வழியினைக் கேட்டனர்

ச. அரவணைத் துயில்பவன் மனமுவந்தேதான்
அவதாரம் செய்தே குறைதீர்ப்பேன் எனக்கூற
பிரமனும் பூமியின் பாரம் குறைந்திட
வழியினை கண்டதால் கவலை ஒழிந்தான்

## 62. தேவகி வஸுதேவர் திருமணம்

ப. தேவகி வஸுதேவர் மண ஊர்வலத்தில்
சோதரன் கம்சன் தேரை செலுத்தினான்

அ. யாவரும் வியக்க திருமண வைபவம்
கோலாகலமாய் இனிதே நடந்தது

ச. எட்டாம் குழவி எமனாக கம்சனுக்கு
இருந்திடுவானென்று விண்ணொலிகூற
சட்டென கோபம் கொண்ட மைத்துனனைத் தேற்றி
தப்பாமல் குழந்தைகளை தருவதாய் கூறினான்

## 63. கண்ணன் வரவின் சுபசகுனம்

ப. பலராமனை ஏழாம் குழவியாகவே
யோகமாயையால் ரோகிணி பெற்றாள்

அ. மலர் விழி துறவாததால் பூர்ணமாசிகொண்டு
மகனுக்கு திருஷ்டி கழித்தாள் யசோதை

ச. பாலகிருஷ்ணன் வரப்போவதால் குழந்தை
த்யானம் செய்கின்றதென்று யசோதையிடம் கூற
காலத்தை எதிர் நோக்கி யாவரும் மகிழ்ந்து
கோலாகலமாய், கொண்டாடினரே

## 64. குழந்தை வேண்டி ஏகாதசி விரதம் இருத்தல்

ப. நந்தகோபனுக்கு குழந்தை வரம் வேண்டி
சாண்டில்யரிடம் வழி கேட்டனர்

அ. சிந்தை ஒன்றியே பகவானை ஜபித்து
ஏகாதசி விரதம் இருந்திடச் சொன்னார்

ச. எல்லோரும் சேர்ந்து விரதம் இருந்ததால்
பாலகிருஷ்ணன் வருகை தங்களால்தானென்று
எல்லோரும் வரப்போகும் கிருஷ்ணனைக் குறித்து
ஆடிப் பாடியே மகிழ்ந்தனரே

## 65. கண்ணன் பிறப்பு:

ப. சங்கு சக்ரமுடன் சர்வாலங்காரமாக
தேவகியருகில் கிடந்தது குழந்தை

அ. பங்கயப் பாதனைப் பார்த்த தேவன் பயந்து
பச்சைக் குழந்தையாய் மாறிடத்துதித்தான்

ச. நள்ளிரவிலே யமுனை கடந்து
கோகுலத்தில் நந்த கோபன் இல்லத்தில்
மெள்ளவே தன்னை விட்டு மாயையான பெண்ணை
இங்கு வைத்திட கூறியதக்குழந்தை

## 66. கண்ணன் கோகுலம் செல்லல்

ப. குழந்தை சொற்படி வசுதேவனும் மகனை
எடுத்துக் கொண்டு நந்தனில்லம் சென்றான்

அ. குழந்தை வெளிவர சோவென மழைகொட்ட
சேஷன் குடை பிடிக்க யமுனை வழிவிட்டதே

ச. யோகமாயை வந்தவுடன் தானே சிறைக்கதவு
தாளிட்டுக் கொண்டு முன் போல் ஆனது
யோகமாயையை கம்சன் தாக்கியதும்
காலன் நானில்லையென்று விண்ணில் பறந்தது

## 67. கோகுலத்தில் கொண்டாட்டம்

ப. நந்த கோபனில்லம் சென்றனரே
நந்த நந்தனனை கண்டு மகிழ

அ. அந்த மிகுந்த அழகினைக் கண்டு
ஆனந்தமுடன் அணைத்தனரே

ச. கையதனைக் கண்ட கோபியர்கள்
கைரேகையைக் கண்டு காண்போரிடத்தே
வையந்தனைக் காத்திட வந்த
வாசவனோ என மகிழ்ந்து பேசினரே

## 68. அரன் மடியில் அரி

ப. காட்ட மறுத்த கண்ணனையும் சிவன்
பார்த்திடவே வற்புறுத்தினான்

அ. வாட்டமாய் குழந்தையும் வீறிட்டலற
பயந்து குழந்தையை மடியிலிட்டனரே

ச. கைரேகை பார்த்து அரசனாவான் என்று
யசோதையிடம் பெருமையாய் சொல்ல
சரேலென்று நுழைந்து வணங்கிய நந்தனுக்கு
ஆசி கூறியே சிவன் மறைந்துவிட்டார்

## 69. பூதனையை அழித்தல்

ப. கோகுல வாசிகள் குழந்தையைக் காண
கூட்டமாய் வந்து பார்த்து மகிழ்ந்தனர்

அ. வைகுண்ட நாதனை குழந்தையைக் காத்திடவே
வேண்டியபடியே வாழ்த்தித் திரும்பினர்

ச. பூதனை என்பாள் கம்ஸன் ஏவலினால்
குழந்தைக்கு பாலூட்ட எடுக்கையிலே

சூதனையறிந்து கண்ணனுமவளை
சூதாக மடிந்து வீழ்ந்திடச் செய்தான்

## 70. சகடன் மடிதல்

ப. வண்டியில் யசோதை பால் தயிர் வைத்து
வண்டியின் கீழே கண்ணனை விட்டாள்

அ. கண்ணன் அழுவதை காதில் வாங்காமல்
பரிசைத்தருவதில் கவனமாயிருந்தாள்

ச. வண்டி மேல் அசுரன் இருப்பதைக் கடை கண்ணன்
காலால் வண்டியை எட்டி உதைக்க
வண்டி குடைசாய்ந்து சகடனும் இறக்க
பால் தயிர் பண்டங்களும் பாழானது

## 71. த்ருணாவர்த்தனின் வதம்

ப. மடியில் படுத்த கண்ணனை யசோதை
கனம் தாங்காமல் கீழே கிடத்தினாள்

அ. நொடிப் பொழுதிலே த்ருணாவர்த்தன் குழந்தையை
சுழற்காற்றை கொண்டு மேல் எடுத்துச் சென்றான்

ச. உடலை பளுவாக்கி த்ருணாவர்த்தனையே
நெருக்கி கசக்கி கொன்று விட்டான்
இடர்தந்திடவே கம்ஸன் அனுப்பிய
அரக்கர்களை கண்ணன் வதம் செய்தான்

## 72. கர்க்கருக்கு நாரணன் கண்ணனே எனல்

ப. ஆசிரியர் நாரணனுக்கு நிவேதித்த பாயசத்தை
தானே நாரணனென்று குடித்துவிட்டான் கண்ணன்

அ. வைசியன் தொட்டதால் கோபித்தகர்க்கரை
திரும்பவும் செய்திட வேண்டினாள் யசோதை

ச. பாயசத்தை திரும்பவும் உண்ட கண்ணன்
கர்க்கருக்கு தான் யாரென்று விளக்க
மாயனும் நாரணனைப் போல் தரிசனம் காட்டி
பாயசத்தை தானே அவருக்குஊட்டினான்

## 73. அன்னை யசோதையிடம் கோபியர்கள் கண்ணனைப்பற்றி குறை கூறுதல்

ப. பாலன் கண்ணன் தரும் தொல்லை தன்னை
கேட்டிடுவீரே! தாயே யசோதே

பாலர்களுடன் கூடியே கண்ணன்
குறும்புகள் பல செய்து தொல்லைதருவான்

அ. பால் தயிர் வெண்ணை தனை
பாங்குடன் திருடி பலருக்கும் அளித்து உண்டிடுவானே
கோல் கொண்டு பானையை உடைத்து கண்ணன்
கொஞ்சமும் அஞ்சாமல் தப்பியோடிடுவான்

ச. தன் முன்னே சென்றிடும் சின்ன பெண்ணின்
பின்னலைப் பிடித்து இழுத்திடுவான்
கன்னிப் பெண் புத்தாடை மீதினிலே செஞ்
சேற்றை அள்ளி தெளித்திடுவான்

## 74. கோபியைக் கண்ணன் ஏமாற்றியது

ப. கையைப் பிடித்து திருடிய கண்ணனை
அன்னையிடம் இழுத்துச் சென்றாள் கோபி

அ. கையை மாற்றச் சொல்லி கண்ணனும் வேண்ட
அந்த சமயம் அவள் பிள்ளை கை மாற்றினாள்

ச. அன்னையசோதையிடம் குறை கூறவந்தவட்கு
அவமானமாகப் போனதைக் கண்டு
அன்னையும் வெட்கமுடன் திரும்புவதைக் கண்டு
கண்ணனும் குறும்பாய் சிரித்தானே

## 75. கண்ணனின் நினைவில் பண்ணிய பிழைகள்

1. கண்ணனின் நினைவினில் நானும்
   பண்ணின பிழைகளை சொல்லிடப்போமோ
2. கண்ணனை நினைந்தே தூங்கிடும் போது
   கண்ணா! கண்ணா! என்று கதறிடுவேனே
3. கண்ணனை நினைந்து தயிர் விற்கையில்
   தயிரென்று கூவாமல் கண்ணா! என்பேன்
4. கண்ணன் நினைவில் என்னை மறந்து
   அல்வாவில் உப்பை அள்ளிப் போடுவேன்
5. கண்ணன் நினைவுடன் ரொட்டி சுடுகையில்
   ரொட்டிக் குழவியை அடுப்பில் இடுவேன்

## 76. யசோதை கண்ணனை உரலில் கட்டுவது

ப. அன்னை தயிர் கடைய மத்தைப் பிடித்து
முலைப்பாலை உண்டான் சின்னக் கண்ணன்

அ. தன்னை உதறிப் பாலைக் காணச் சென்ற
அன்னை மேல் கோபித்து தயிர் பானை உடைத்தான்

ச. கோபம் கொண்ட யசோதை கொஞ்சமும் இரக்கமின்றி
குழந்தை அமர்ந்திருந்த உரல்தனிலே
தாபமுடன் பார்க்கும் பார்வையைப் பாராமல்
தாம்புக்கயிற்றால் வயிற்றில் கட்டினாள்

## 77. மருதமரம்சாயகுபேரமக்கள் சாபம் நீங்கள்

ப. கட்டின உரலுடன் உருட்டி வந்தே---இரு
மருத மரத்தின் இடையில் வந்தான்

அ. பட்டென்று இரு மரமும் சாய்ந்த பின்னே
குபேரன் பையன்கள் சாபம் நீங்கினரே

ச. கோபியர்களுடன் கொஞ்சிப் பேசும் போதும்
கோபாலர்களுடன் குறும்பு செய்யும் போதும்
பாபியர்களை முடிப்பதற்கே வெகு
பாங்கான யோசனைகள் பண்ணியே இருப்பான்

## 78. மண்ணைத் தின்று மண்டலம் காட்டியது

ப. கோபர்களுடன் பலராமனும் சேர்ந்து
கோபாலன் மண்ணைத் தின்பதைக் கூறினான்

அ. கோபமாய் யசோதை கோல் கொண்டடித்திட
வேகமாய் வந்து வாயைத்திற என்றாள்

ச. பாலனும் பயந்து வாயைத் திறக்கவும்
அண்டசராசரம் அதனுள் தெரிந்திடவும்
பாலனாய் மாறிட மாலினை அன்னை
வேண்டி துதித்து வணங்கினாளே

## 79. அகாசுரவதம்

ப. சகாக்களுடன் கண்ணன் ஆவினை மேய்த்திட
காட்டினிலே வெகு தூரம் சென்றான்

அ. அகாசுர பாம்பின் வாய் சென்ற அனைவரும்
நெடியினைத் தாங்காது திணறினரே

ச. கண்ணனும் பாம்பின் வாயில் நுழைந்து
தன் உடலை பெரிதாக்கிக் கொண்டு
கண்டம் உள்ளே சென்று மண்டையைப் பிளந்து
யாவரும் வெளி வர வழி செய்தானே

## 80. கண்ணன் மீது பிரம்மனின் ஐயம்

ப. புளித்த மோரைத்தர வெட்கம் கொண்ட நண்பன்
தானே அதனைக் குடித்தானே

அ. களிப்புடனே கண்ணன் நண்பனுடைய
வாயில் வழிந்த மோரை நக்கினான்

ச. கண்ட பிரம்மனும் அதிசயித்து
கண்ணனும் கடவுளா என்று சந்தேகித்து
கண்ணனை சோதிக்க எண்ணம் கொண்டு
கலக்கம் உண்டாக்க குழப்பம் செய்தான்

## 81. பிரம்ம தேவனில் சூழ்ச்சி

ப. அயனின் சூழ்ச்சியால் ஆவினை மேய்க்கையில்
கன்றுகள் சிறுவர்கள் காணாமல் போயினர்

அ. தயக்கமின்றி கண்ணன் தானே அனைவருட
உருவமெடுத்து அவர்கள் கவலையை நீக்கினான்

ச. தன்னுள் இவ்வுலகம், உலகத்து ஜீவன்கள்
எல்லாம் அடக்கம் என்று கண்ணன் காட்ட
தன் செயலை எண்ணி அயனும் வருந்தி
வெட்கம் கொண்டு கண்ணன் புகழ் கூறி துதித்தான்
முனி சொல்லால் கோபர்களுக்கு மணவினை செய்விக்க
கோபகன்னியர்கட்கு கண்ணனே பதியானான்
கனிவாய் கண்ணன் கோக்கும் கோபியர்க்கும்
கோப கன்னியருக்கும் கரும்பானார்

## 82. பிரம்மன் தோல்வி

ப. எந்த வித மாற்றமும் ப்ருந்தாவனந்தன்னில்
காணாததைக் கண்டு அயனும் திரும்பினான்

அ. வந்த அயனிடம் விந்தை புரிந்திடவே
தானே அயனாய் மாறி விரட்டினான் கண்ணன்

ச. கண்ணனின் செயலே என்று அறிந்த அயன்
தன் செயலுக்கு வருந்தி வெட்கமடைந்தான்
வண்ணன் புகழினை வாயார புகழ்ந்து
நாரணன் ரூபத்தில் கண்ணனைக் கண்டான்

## 83. தீக்ஷித பத்னிகளின் கண்ணன் பக்தி

ப. பசிக்கு புசிக்க வேள்வி செய்தீக்ஷிதர்கள்
கோபர்களுக்கு தர மறுத்தனரே

அ. பசிதாளா சிறுவர்கள் அவர்தம் மனையாளிடம்
கண்ணன் பெயர் சொல்லி உணவு வேண்டினர்

ச. யாகசாலை நீங்கி பலவித உணவுடன்
பரிந்தே கண்ணனிடம் விரைந்தனர் மனைவியர்
யாகத்தலைவனே மாயக்கண்ணன் என்று
கணவர்களுக்கு புரியவைத்தனரே

## 84. காளிங்க மர்த்தனம்

ப. கண்ணன் யமுனையில் பொத்தென்று வீழ
காளிங்கன் அவனை சுற்றிக் கொள்ள

அ. அண்ணனும் அனைவரும் கண்ணனிடத்தே
காளிங்கனை உதறிவந்திட வேண்டினர்

ச.1. உடலை உதறி தலை மீது நின்ற
கண்ணனை காளிங்கனும் மனைவியும் வேண்ட
உடனே காளியனை யமுனை நீங்க
பணித்து கண்ணனும் களித்திருந்தான்

2. கனிவர்க்கங்களை எவரும் புசிக்க முடியாமல்
தேனுக அரக்கன் காத்து வந்தான்
தனியாக பலராமன் தேனுகனைக் கொன்று
பாலர்களுக்கு கொடுத்து புசித்தான்

## 85. பாண்டீரத்தில் பலராமன் செய்த பிரலம்பாசுரவதம்

ப. கோபச்சிறுவர்கள் பலராமன் கண்ணனுடன்
பாண்டீரம் சென்று விளையாடினரே

அ. கோபச்சிறுவனைப் போல் 'பிரலம்ப' னென்றும்
அசுரன் சூதாக விளையாட்டில் கலந்து கொண்டான்

ச. தோற்ற அசுரன் பலராமனை
தோளில் ஏற்றி வெகு தூரம் சென்றான்
ஏற்ற சமயத்தில் கண்ணன் ஏவலினால்
அசுரனை முட்டியால் நெருக்கி கொன்றான்

## 86. வத்சனையும் பகாசுரனையும் வதைத்தது

ப. காட்டில் அலைந்த கம்சன் ஏவலர்கள்
வத்ஸனையும், பகனையும் கொன்றான் கண்ணன்

அ. காட்டுத் தீ பயம்தனை 'கோபர்கள் நீங்கவே
கண்ணனும் அதனைப் புசித்து விட்டான்'

ச. நந்தகுமாரர்களின் விந்தைகளை எண்ணி
கோபகுமாரர்கள் வியந்தனரே
மந்தஹாஸமுடன் கண்ணனையவர்கள்
வாயார வாழ்த்தி துதித்தனரே

## 87. வேணு

ப. தன்னை விட்டு கண்ணன் பிரியாதிருக்கும்
காரணம்தனை வேணு சொன்னது கோபியரிடம்

அ. என் உள்ளந்தன்னில் ஏதுமில்லாததால்
கண்ணன் இருந்திட இடமாச்சு

ச. கஷ்டங்களையே பொறுத்திருப்பேன்
கணமும் பிறரை துன்புறுத்தேன்
இஷ்டப்படி ஏதும் பேச மாட்டேன்
இனிய சொல்லால் பிறரை இன்புறச் செய்வேன்

## 88. தந்தையை கண்ணன் வருணனிடமிருந்து மீட்டல்

ப. ஏகாதசியன்று நள்ளிரவிலே
நேரம் தெரியாமல் குளிக்கச் சென்றான் நந்தன்

அ. ஆகாத நேரத்தில் ஜலதேவன் வருணனை
அவமானித்த நந்தனை சிறையிலிட்டான்

ச. கண்ணன் வருணலோகம் சென்று தன் தந்தை
நந்தனை மீட்டு வந்தாரே
கண்ணனால் பிரமனும் இந்த்ரனும் வருணனும்
கர்வமொழிந்து கண்ணனை வணங்கினர்

## 89. கோபியர் ஆடைகளை அபகரித்தல்

ப. வாழ்க்கைக்கடலில் உழன்றிடாமலே
சீக்கிரமாகக் கரையேறச் சொன்னான் கண்ணன்

அ. வாழ்வை உதறி மாயை நீங்கி
நாராயணனிடம் சேர்ந்திடுவாயே

ச. கரையேறும் வழியினை கண்ணனிடம் கேட்க
கருணைமிகக் கொண்டு காட்டிட எண்ணம் கொண்டான்
விரைவாக கோபியர் அக்ஞானம் தன்னை
போக்கிடவே ஓர் விளையாட்டைச் செய்தான்

## 90. கோபிகைகளின் துணிகளை ஒளித்தல்

ப. ஆடையின்றி ஆற்றில் குளித்த கோபிகளையே
அடக்கிடவே ஒளித்தான் ஆடைகளை கண்ணன்

அ. ஆடையின்றி கரையேற வெட்கித்த கோபியர்
அழுது புலம்பி தவறினை உணர்ந்தனர்

ச. நீரில் கண்ணன் இல்லை என்று எண்ணவேண்டாம்
சர்வவியாபி கண்ணன் என்றெடுத்துரைத்தான்
பாரில் இதனை யாவரும் உணர்ந்திட
பாலனும் லீலை செய்து துணியை வீசினான்

## 91. ஆத்ம விசாரம்

ப. ஆத்மா உலகிலே ஒன்றென்பதாலே
கண்ணனும் கோபியரும் ஒன்றெனச் சொன்னாள்

அ. ஆத்மா ஒன்றிற்கே ஒளியுண்டு என்றும்
உடலுக்கும் உலகிற்கும் ஒளியில்லை என்றான்

ச. ஆதம்ஸவரூபத்தை அறவே மறந்து
அக்ஞானத்தாலே மூடி மறைத்த
ஆத்மாக்களுக்கு அறிவு புகட்டவே
ஆடை ஒளித்த லீலை செய்தான் கண்ணன்

## 92. கோவர்த்தன மலையைக் குடை பிடித்தது

ப. இந்திரனுக்கு யாகம் செய்வதைத் தடுத்து
கோவர்த்தனனைப் பூஜிக்க சொன்னான் கண்ணன்

அ. தந்தையும் பூஜை செய்ய வெகுண்ட இந்திரன்
அடை மழை பெய்திட வருணனை ஏவினான்

ச. கோவர்த்தன மலையை குடையாகப் பிடித்து
கோகுலம் தன்னை காத்தான் கண்ணன்
தேவனும் வெட்கி பிழைக்கு வருந்தி
கண்ணனிடமே மன்னிப்பை கோரினான்

## 93. ராஸக்ரீடை

ப. கண்ணன் குழலினை கேட்டதும் கோபியர்
கைவேலை விட்டு கண்ணனிடம் சென்றனர்

அ. வண்ணக்கடலில் நதிகள் சேர்வதைப் போல்
கண்ணனிடமே கோபியரடைந்தனர்

ச. நிலை பயனில்லா உடைமைகளையும்
நானெனும் அகந்தை நீங்கி வந்த பின்
நிலை மாறி திரும்பாமல் முக்தியடைவோமென்று
கோபியர்களும் கண்ணனிடம் புகன்றனர்

## 94. கண்ணன் புகழ்

ப. கண்ணன் புகழினை பாடிடுவோம்
கண்ணாரக் கண்டு களித்திடுவோம்

அ. வண்ணன் மலரடி சேர்ந்திடவே ---இந்த
வையம் உதறி வந்திடுவோம்

ச. காலன் வரும் நேரம் அறிவோமா? உயிர்
கண்ட சமயத்தில் கொண்டு செல்வான்

காலன் நம்மிடம் வருமுன்னே

கண்ணனிடம் முக்தி பெற்றிடலாமே

## 95. ராஸலீலையில் காமனும் பிரமனும் அடைந்த தோல்வி

ப. காமனும் தன் கணையின் பெருமை சொல்லியே
கண்ணனை போட்டிக்கு அழைத்தானே

அ. காமன் சிவனிடம் தோற்றதை கண்ணன் சொல்ல
முனிவர்களிடம் பெற்ற வெற்றியைக் கூறினான் காமன்

ச.1. ராஸலீலையில் காமன் கணை வீச
கண்ணனும் காம வாசனையைப் பொசுக்க
வாஸவன் கோபிமார்களுடன் இணைந்து
அத்வைதமாவதை கண்டோடினான் காமன்

2. அயனும், ராஸலீலையை சந்தேகிக்க
அனைவரும் கண்ணனாய் காக்ஷியளிக்க
பயந்து பிரம்மனும் ஓம் படியாய்
பங்கயக் கண்ணன் மாயம் செய்தான்

## 96. ராஸலீலையின் விவரம்

1. ராஸலீலைதனைப் பற்றியே
அறிந்து கொண்டு கண்ணன் அடிபணிவாய்

2. ராஸலீலை செய்யும் கண்ணனுக்கு
வயது பதினொன்றேயாகும்

3. ராஸலீலையின் கோபியரெல்லாம்
காமனிடம் தோற்ற முனிவர்களாம்

4. ராஸலீலை செய்யும் கோபியருக்கு
இதுவே கடைசி பிறவியாகுமாம்

5. ராஸலீலையில் காமனும் பிரம்மனும்
கண்ணனிடத்தில் தோற்றனரே

6. ராஸலீலையில் காமம் நசிந்ததைக்
கண்டவர்களும் திரும்பினரே

7. ராஸலீலையில் ஆடல் பாடல்
அனைத்திற்கும் மட்டும் இடம் உண்டு

8. ராஸலீலையில் கோபியர்களுக்கு
சரீர சம்பந்தம் கிடையாது

9. ராஸலீலை அழைப்பின் வேணு நாதம்
தகுதி பெற்ற கோபிக்கே கேட்கும்

10. ராஸலீலை செய்யும் கோபிகளும்
புற அழகினை பார்ப்பதில்லை

11. ராஸலீலை வெளியில் நடப்பதால்
யாவருமதனைப் பார்க்க முடியும்

12. ராஸலீலையின் லீலையைக்காண
தேவரனைவரும் வந்தனரே

13. ராஸலீலை கண்ணன் கோபியாயும்
கோபி கண்ணனாய் மாறினரே

14. ராஸலீலையில் ஆடிய கோபியர்
பஞ்சபூத உடல் வீட்டிலிருந்தது

15. ராஸலீலையில் பங்கு பெறாததால்
நாரதரும் மிக விசனமடைந்தார்

16. ராஸலீலையில் ராதை சொற்படி
பெண்ணுறு கொண்டு பங்கெடுத்தார்

17. ராஸலீலை காமலீலையல்ல
காமத்தை வெல்லும் லீலை என்றிடலாம்

18. ராஸலீலையின் சாரம் இதுவே
ஜீவன் பிரம்மத்துடன் ஒன்றுவதே

## 97. கோபிகளின் கர்வபங்கம்

ப. கேபியர் கர்வந்தன்னை அடக்கிடவே கண்ணன்
அவர் தம் பார்வைக்கு மறைந்தானே

அ. கோபியர் பலவிதமாய் கெஞ்சிகண்ணனிடம்
அழுது புலம்பி சரணடைந்தனரே

ச. கண்ணனும் கோபியர்முன் காக்ஷியளித்து
அகம்பாவம்தன்னை நீக்கிடச் சொன்னான்
வண்ணனும் தனியாய் தானும் வருந்தியதாய்
சொல்லி கோபிகளுடன் கூடி மகிழ்ந்தான்

## 98. கண்ணனை யாரென்றறிதல்

ப. கட்டழகன் கண்ணன் யாரென்று
திட்டமாய் கூறிட முடியாதே---தோழி

1. தொட்டில் பருவத்தில் செய்ததை
எட்ட முடியாதே எண்ணத்தினாலும்
கட்டின உரலுடன் மரத்தினை சாய்த்ததை
கனவிலும் எண்ணமுடியாதே!

2. எத்தனை பேர் வீட்டில் சென்று
எவ்வளவு பண்டம் உண்ண முடியும்
அத்தனை பேர்களில் வீட்டிற்கும் சென்று
அட்டூழியங்கள் செய்திடப்போமோ

3. ஏழு வயதினிலே கண்ணன்
எட்டு கோடி கோபியருடனே
ஆடிப்பாடி மகிழ்ந்ததையறிய
ஆச்சர்யம் கொண்டு மூர்ச்சையடைந்தேன்

4. கண்ணனிடம் சென்று நானும் அவனைபாலனாலோலனா
என கேட்டேன்
கண்ணனும் தன்னை வையமுழுதும் வியாபித்திருக்கும்
பரமாத்மா என்றான்

## 99. சங்கசூட வதம்

ப. கண்ணன் தன் தந்தையை விழுங்க வந்த பாம்பை
காலால் தொட்டதும் சாபம் நீங்கிற்று

அ. வண்ணனுக்கு இடர் தந்த சங்க சூடனையும்
வதம் செய்து ரத்னத்தை அண்ணனுக்களித்தார்

ச.1. அரக்கன் அரிஷ்டனும் காளை வேடம் பூண்டு
அனைவரையும் கலங்கிடச் செய்தான்
கரத்தினால் கொம்பைப் பிடித்து மடியச் செய்த
கண்ணனை வாழ்த்திவானோர் மலர்மாரி பொழிந்தனர்

## 100. கேசி வதம்

ப. அரக்கன் கேசியும் ஆயர்பாடி சென்று
குதிரை வடிவெடுத்து தொல்லை தந்தான்

அ. கரத்தினை கண்ணனும் குதிரை வாயில் விட்டு
பெரிதாக்கி மூச்சுமுட்டி இறக்கச் செய்தான்

ச. ஐந்து சிறுவர்களை விளையாட்டில் வியோமனும்
குகைக்குள் தள்ளி பாறையால் மூடினான்
நந்தகுமாரனும் கழுத்தை நெருக்கி
வியோமனைக் கொன்று பிள்ளைகளைக் காத்தான்

## 101. கண்ணனை கம்சன் யாகத்திற்கு அழைத்தல்

ப. நாரதர் கம்சனிடம் காலன் கண்ணனைப் பற்றி
நினைவுதனைக்கூறி மறைந்தாரே

அ. தீர ஆலோசித்து தனுர்யாகத்திர்க்கு
ராம கிருஷ்ணர் வர அக்ரூரரை அனுப்பினான்

ச. கோகுல வாசிகள் கண்ணனையனுப்ப
ஆயிரம் தடைகள் சொல்லினரே
கோகுலன் ராதையிடம் வேணுவைத் தந்து
ஊதினால் வருவேன் என்று சொல்லி சென்றான்

## 102. மதுராவில் கண்ணன் நிலை

ப. கொடிய மனம் படைத்த வண்ணானைக் கொன்று
நறுமண மாலையிட்ட சுதாமனை வாழ்த்தினான்

அ. கொடியோன் கம்ஸனுக்கு சந்தனம் அரைப்பாள்
குணத்தில் மகிழ்ந்த கண்ணன் கூனல் நீக்கினான்

ச. மதுரா வாசிகள் மகிழ்ந்தே கண்ணனை
மரியாதை செய்து வரவேற்றார்கள்
மதுசூதனனும் மகிழ்ந்து அவர்களை
மனமாற வாழ்த்தி மகிழ்வுடன் வாழ செய்தார்

## 103. கம்ஸன் வதம்

ப. யாக வில் ஒடித்து கம்சன் ஏவியகரியையும்
மல்லன் சாணூரனையும் கொன்றான் கண்ணன்

அ. வேகமாய் வந்த மாமனுக்கு முக்தி தந்து
பெற்றோரையும் கண்ணன் விடுதலை செய்தான்

ச. பாட்டனுக்கு அரசளித்து மதுராவில் தங்கி
கோவையும், கேபியரையும் தேற்றிடச் சொன்னான்
வாட்டமுற்ற பெற்றோர்க்கு தன் கடமை முடிந்து
வருவதாக சொன்னான் கண்ணன்

## 104. கண்ணனும் குரு சந்தீபனியும்

ப. கண்ணனிடம் குருதக்ஷிணை மறுத்த சந்தீபனி
தக்ஷிணை பெறாமலே வித்தையை பரப்பச் சொன்னான்

அ. வண்ணனும் அர்ஜுனனுக்கும் உத்தவருக்கும்
ஏதும் பெறாமல் ஞான உபதேசம் செய்தார்

ச. கடலில் அமிழ்ந்த மகனை தக்ஷிணையாக
குருபத்தினியும் கண்ணனிடம் கேட்க
கடலில் மூழ்க சங்கோடு மகனும் கிடைக்க
பாலனை கொடுத்து நல்லாசியும் பெற்றான்

## 105. உத்தவரின் கர்வம் நீங்குதல்

ப. கண்ணனும் உத்தவரை கலங்கும் வ்ரஜ பூமி
சென்றவர்கட்கு அறிவை புகட்டச் சொன்னான்

அ. வண்ணனிடம் கர்வமாய் படிக்காத மூடர்கட்கு
தான் சொல்லும் அறிவுரைகள் பயனளிக்காதென்றார்

ச. வற்புறுத்தலினால் குருவாக உத்தவரும்
கோகுலம் சென்று யாவர் நிலையும் கண்டு
சற்றும் விடாமல் சதா கண்ணன் நினைவாய்
அவனோடு இருப்பதால் சீடனாய் திரும்பி வந்தார்

## 106. காலயவன் வதம்

ப. ஜராசந்தன் கண்ணனிடம் கம்ஸனைக் கொன்றதால்
பதினேழு முறையும் போட்டியிட்டு தோற்றான்

அ. ஜராசந்தனும் பின் யதுகுலத்தினார்
புறம் காட்டிடும் காலயவனை சேர்த்துக் கொண்டான்

ச. உடனே கண்ணன் முசுகுந்தன் உறங்கும்
குகைக்குள் செல்ல காலயவனும் பின்
தொடர்ந்து முசுகுந்தன் காலை இடறி
அவன் பார்வையினால் எரிக்கப்பட்டான்

## 107. ஜராசந்தன் ஏமாற்றம்

ப. கண்ணனைக் கண்டு தரிசித்த பின்
முசுகுந்தனும் பதரி சென்றான்

அ. அண்ணனுடன் கூட கண்ணனும் ஓடின
மலைக்குத் தீ வைத்தான் ஜராசந்தன்

ச. சோதரர் இருவரும் தீக்கிரையாகினார்
என்று ஜராசந்தன் நிம்மதி யுடனே----தன்
சாதனையே எண்ணி மகிழ்வு கொண்டு
நாட்டையடைந்து ஆட்சி புரிந்தான்

## 108. ருக்மணியைக் கவர்ந்து செல்லல்

ப. நிம்மதியாய் வாழ மதுராபுரி நீங்கி
துவாரகைக்கு சென்றான் கண்ணன்

அ. அம்புஜப் பாதனைத் தன்னை மணக்கச் சொல்லி
ருக்மணியும் ஓர் கடிதமெழுதினாள்

ச. பார்வதியை வணங்கச் சென்ற ருக்மணியை
பார்த்த அரசர்கள் மயங்கியே வீழ
தேர் மீது ருக்மணியை ஏற்றி அரசர்கள்
மீதே தேரை ஓட்டிச் சென்றான் கண்ணன்

## 109. ருக்மணியின் மகன்

ப. எரிந்த மன்மதனும் கண்ணனுக்கு மகனாய்
பிறந்து, அரக்கனால் கடலில் எரியப் பட்டான்

அ. பெரிய மீன் விழுங்கவும் அரிந்தமாயாவதியும்
குழந்தையைக் கண்டதும் ஐயம் கொண்டாள்

ச. மன்மதன் அக்குழந்தை என்றறிந்த மாயாதேவி
கணவனுடன் துவாரகை சென்றாள்
தன் பிள்ளை என்று நாரதர் சொன்னதும்
ருக்மணியும் மகிழ்வு கொண்டாள்

## 110. ஜாம்பவதி பாமா திருமணம்

ப. ஸத்ராஜித் மணியை அரசனுக்குத்தர
கண்ணன் விரும்பியும் மறுத்து விட்டான்

அ. ஸத்ராஜித் தம்பி சிங்கத்தால் காட்டிலிறக்க
சிங்கத்திடம் மணியைக் கரடியும் கவர்ந்தது

ச. கண்ணன் கரடியுடன் சண்டையிட்டு
மணியையும் பெற்றவர் பெண்ணையும் மணந்தார்
கண்ணன் மணியை ஸத்ராஜிடம் தந்தவர்
பெண் சத்யபாமாவை மணந்து கொண்டார்

## 111. கண்ணனின் மண வாழ்க்கை

ப. ருக்மணிக்குப் பின் ஏழுவரை மணந்து
பட்டத்து ராணிகளாக்கினான் கண்ணன்

அ. அக்ரமன் நரகனால் சிறையிடப்பட்ட
தேவகன்னிகைகளை சிறை மீட்டான்

ச. எவரும் மணந்திட சம்மதியாத
அறுபதினாயிரரும் கலங்கி தவித்தனர்
கவலையை ஒழித்திட கண்ணனே முன் வந்து
அனைவரையும் தானே மணம் செய்து கொண்டான்

## 112. ருக்மணியின் அகம்பாவம் நீங்கல்

ப. ருக்மணி கணவரின் கால் பிடித்தே தன்
அழகில் மயங்கி பெருமை கொண்டாள்

அ. அக்கணமே அவள் அகம்பாவம் போக்கவே
கண்ணன் தன்னைப் பற்றி தாழ்மையாகப் பேசினான்

ச. அழகிலும் குலத்திலும் சிறந்த ருக்மணியும்
தன்னிலும் சிறந்தவனை மணந்திடலாம் என
குழலூதும் கண்ணன் சொல்ல மூர்ச்சித்த ருக்மணியை
கண்ணனும் பல விதமாய் தேற்றினானே

## 113. சியமந்தகமணி விவரம்

ப. ஸத்ய ராஜித்தனை கொன்று மணியைப் பறித்த
சத்தன்வனை கண்ணன் துரத்தினான்

அ. பத்திரமாக மணியை அக்ரூரரிடம்
தந்து ஓடின சத்தன்வனை கொன்றான் கண்ணன்

ச. மணியை காணாது, பலராமனும் மக்களும்
கண்ணன் மீது ஐயம் கொண்டனர்
மணியை காசிக்கு எடுத்துச் சென்ற
அக்ரூரரை அழைத்து எடுத்துக் காட்டினான் கண்ணன்

## 114. தேவலோக பாரி ஜாதம் பூமிக்கு வருதல்

ப. நாரதர் தந்த பாரிஜாத மலர்களை
இருமுறையும் கண்ணன் ருக்மணிக்கே தந்தான்

அ. நாரதர் கூற பாமா வருந்த
செடியையே தருவதாய் சொல்லி தேற்றினார் கண்ணன்

ச. தர மறுத்த இந்திரனிடம் கண்ணன் போரிடுகையில்
இருவரின் பெற்றோர்கள் சண்டையை நிறுத்த
கரங்குவித்து இந்திரன் கண்ணனே
நாரணன் என்று தெரிந்து செடியைத் தந்தான்

## 115. பிரத்யும்னன் விவாகம்

ப. ருக்மணி மகனும் ருக்மியின் மகனை
மணம் செய்து கொண்டு அனிருத்தனைப் பெற்றனர்

அ. ருக்மியின் பௌத்ரி ரோசனையை
அணிருத்தனுக்கு மணம் செய்தனர்

ச. பலராமரோடு வலுவில் சொக்கட்டான்
ஆடி பொய்யுரை கூறினான் ருக்மி
பலராமனும் ருக்மியை வதம் செய்ததை
பாராட்டாமலும் கண்டிக்காமலும் கண்ணன் மௌனமானான்

## 116. உஷா அனிருத்தன் திருமணம்

ப. நாரதர் உதவியால் உஷாவின் தோழி
அனிருத்தனை எடுத்து வந்தாள்

அ. சூரன் அனிருத்தனை சிறையிலடைத்ததை
அறிந்த கண்ணன் போர் தொடுத்தான்

ச. சிவபக்தன் பாணாசுரனை கொல்லாமல் கண்ணன்
ஆயிரம் கைகளில் நான்கை மட்டும் விட்டு வைத்தான்
மகள் உஷாவும் கனவில் கண்ட
அனிருத்தனையே மணம் செய்து கொண்டாள்

## 117. நிருக மகாராஜாவின் சாபம் நீங்கல்

ப. நிருகர ராஜன் செய்த பசுக்கள் தானத்தில்
தவறுதலாய் ஒன்றை திரும்ப தானம் செய்தான்

அ. இருவரும் பசுவை தனதென்று வாதிட
அரசனிடம் உண்மை வேண்டி காத்திருந்தனர்

ச. அரசனைக் காணாததால் ஓணாணாகிட சபித்து
கண்ணனால் சாபம் தீருமென்று கூறினர்
ப்ரத்யு மன்னன் நீருக்காக அலைகையில்
கண்ட ஓணானே கண்ணணால் சாபம் நீக்கப்பட்டது

## 118. பௌண்டரீக வாசு தேவர் வதம்

ப. கண்ணனுடனே வலுவில் சண்டை செய்து
மடிந்தான் பௌண்டரீக வாசுதேவன்

அ. வண்ணனையழிக்க அபிசார யாகம் செய்ய
சிவனும், மகனிடம் கூறினரே

ச. யாகத்தின் வெப்பத்தைத் தாங்காத மக்கள்
கண்ணனிடம் சென்று அலறினரே

வேகமாய் சுதர்சனம் பூதத்தைக் கொன்று
கண்ணனிடம் வந்தடைந்தது

## 119. பலராமன் வீரம்

ப. பலராமர் யமுனையை கோபியர்க்காக
கலப்பையைக் கீறி வரவழைத்தார்

அ. பலவந்தமாக துர்யோதனன் பெண்ணை
தூக்கிச் சென்ற கண்ணன் மகனை கௌரவர்கள்
துரத்தினர்

ச. கலப்பையால் அஸ்தினாபுரத்தை கங்கையில் தூக்கிப்
போட்ட

பலராமருக்கு அடிபணிந்தனர்
குல வழக்கப்படி துரியோதனனும் கண்ணன்
மகனுக்கு திருமணம் செய்தார்.

## 120. நாரதரின் கலகத்தை கண்ணன் அடக்கல்

ப. நாரதர் கண்ணன் வீட்டு நிலைமையைக் கண்டு
கலகம் செய்ய ஆசை கொண்டார்

அ. தாரமுடன் அவர்க்கு பாத பூஜை செய்து கண்ணன்
பலவித இல்லற வேலை செய்து காண்பித்தார்

ச. கண்ணனும் தன்னை நாரதரின் பாட்டனென்றும்
பிரம்மசாரி வம்பிற்காக அலையக் கூடாதென்று
வண்ணனும் நாரதர்க்கு பிரம்மசாரிகளின்
தர்மங்களையே எடுத்துக் கூறினார்

## 121. ஜராசந்த, சிசுபால வதம்

ப. ஜராசந்தனைக் கொல்ல கண்ணனும் பீமனும்
அர்ஜுனனும் சேர்ந்து சூழ்ச்சி செய்தனர்

அ. ஜராசந்தன் முன் இவர்கள் அந்தண வடிவு கொண்டு
மல்யுத்தம் செய்திட தானமாய் கேட்டனர்

ச. கண்ணனை பார்த்தபடி மல்யுத்தம் செய்து
ஜராசந்தனை பீமன் கொன்று விட்டான்
கண்ணனை யாகத்தில் மரியாதை செய்ததை
கண்டித்த சிசுபாலன் தலையை வெட்டினான் கண்ணன்

2. காண்டவ வனத்தை அக்னிக்கு தந்து
அர்ஜுன்ன தேரும் தனுசும் பெறச் செய்து
பாண்டவருக்கு மயனால் அழகான
சபை அமைத்துத் தந்து தங்கினார் கண்ணன்

## 122. சால்வனின் வதம்

ப. பலராமனால் தோற்ற சால்வனும், சிவனருளால்
பறக்கும் பட்டணத்தில் சேனைதிரட்டினான்.

அ. பலமாக அடிபட்ட கண்ணன் மகனும்
சால்வனின் சேனாபதியைக் கொன்றான்

ச. கண்ணன் துவாரகை சென்று கடும்போரிட்டதால்
சால்வனும் வசுதேவனை வெட்டினதாய்ச் சொல்ல
வண்ணனும் நம்பாமல் பாணம் பல தொடுத்து
பட்டணத்துடனே சால்வனை அழித்தான்

## 123. பலராமனின் பிரம்ம பழிதீரல்

ப. நண்பனான சால்வன் மடிந்ததினால்
அத்தை மகன்கள் கண்ணனுடன் போரிட்டனர்

அ. கண்ணனால் சோதரர் இருவரும் மடிய
தனக்கினி வதம் செய்யும் வேலை தீர்ந்ததென்றெண்ணினான்

ச. பாரதயுத்தம் வருவதை யறிந்த
பலராமன் யாத்திரை செல்கையிலே
பாரதனிலுள்ள தீர்த்த ஸ்நானம் செய்து
மகரிஷிகளால் போற்றப் பட்டார்

ச. அவமதித்த சூதரை பலராமர் கொல்ல
ரிஷிகள் அவனை வேறு பெயரில் எழுப்பி
தவமுனி கொன்ற அரக்கனின் மைந்தனை கொன்றால்
பிரும்ம பழி தீருமென்றார்கள்

## 124. ஸுதாமன் கதை

ப. பரம ஏழையான கண்ணனின் நண்பன்
ஸுதாமனை துவாரகைக்கு அனுப்பினாள் மனைவி

அ. பரந்தாமனும் அவனை பாங்குடன் உபசரித்து
அவர் தந்த அவலில் ஓர் பிடியை உண்டார்

ச. கண்ணன் கேட்டும் தாராமல் ஒளித்து
கடலையைத் தின்றதால் வந்த தரித்திரம்
கண்ணன் அவலை திண்றதும் பொங்கி
வழிந்தது செல்வம் ஸுதாமன் இல்லத்தில்

## 125. சுபத்ராவின் திருமணம்

ப. சுபத்திரையைக் கண்ட பாலசந்யாசியான
விஜயனும் மணம் செய்ய ஆசை கொண்டான்

அ. கபடமாக பலராமர் மூலம்
சுபத்ரையின் மாளிகையில் தங்கினான் சந்யாசி

ச. சன்யாசியாரென்று அறியாத சுபத்திரை
விஜயனைப் பற்றி விவரம் கேட்டாள்
சன்யாசியே விஜயன் என்று அறிய
மகிழ்வுடன் அவளும் பழகினாளே

2. சுபத்ரை ஆரோக்யம் பெற சிவ பூஜை செய்ய
கடல் நடுவிற்கு சென்றனர் யாதவர்கள்
சுபமுகூர்த்தத்தில் காந்தர்வ விவாகம்
புரிந்திட விஜயன் கேட்க சுபத்திரை கண்ணீர்விட்டாள்

3. தந்தையை நினைத்ததும் தேவர்கள் அனைவரும்
திருமணத்திற்கு உடனே வந்தனர்
சிந்தையில் கண்ணனை நினைத்ததும் பலராமர்
நீங்கலாய் யாதவர் யாவரும் வந்தனர்

4. மணமாகி சில நாள் சென்று இருவரும்
சென்றதை கண்டித்து கடும் போரிட்டனர்
கணமே கண்ணன் எவர்க்கும் எடுத்துச் சொல்ல
சோதரர்கள் தங்கைக்கு சீர் செய்து திரும்பினர்

## 126. பத்மாசுர வதம்

ப. எவரைத் தொட்டாலும் எரிந்து விடும் வரம்
சிவனிடம் பெற்றான் பத்மாசுரன்

அ. அவர் தலயை தொட வந்த சூரனிடம்
அகப் படாம லே ஓடினார் சிவன்

ச. தந்திரமாக சூரனிடம் சிவனை
நம்பாலிருக்கும் படி செய்தான் ஹரி
அந்த கணமே தன் தலையை தானே
தொடச் செய்து சூரனை எரிந்திடச் செய்தான்

## 127. புண்டலீகன் பக்தி

ப. புண்டலீகன் தன் உடல் நிலை சரியில்லா
வயோதிக பெற்றோர்க்கு தொண்டு செய்து வந்தான்

அ. தொண்டினில் மகிழ்ந்த கண்ணனும் அவனுக்கு
தரிசனம் தந்திட பண்டரீபுரம் சென்றான்

ச. வந்த கண்ணனை வாசலில் செங்கலிட்டு
அதன் மீது இருக்கச் சொல்லி பணிமுடித்து வந்த
புண்ட லீகனுக்கு தரிசனம் தந்திட
கால் நோவ இடுப்பில் கை வைத்து காத்திருந்தான்

## 128. கண்ணன் மறைவு

ப. தேவர்களை காக்க கண்ணன் அசுரர்களை கொன்று
பூமி பாரம் தீர்க்க பாரதப்போர் நடத்தினார்

அ. யாவரும் அழிக்க முடியாத தம் குலத்தை
தானே அழித்துக் கொள்ளச் செய்தான் கண்ணன்

ச. உத்தவர்க்கு பல உபதேசம் செய்த பின்
பக்தர் பலருக்கு முக்தியை தந்து
பத்ரிகாச்ரம் சென்று பகவன் நாமம் சொல்லி
முக்தி பெறுவாயென்று ஆசீர்வதித்தார்

2. கண்ணனின் காலை மானென எண்ணி ஓர்
வேடனும் அம்பினால் வேகமாய் அடிக்கவும்
அண்ணன் பலராமன்
மூச்சையடக்கவும்
விண்ணுலகில் இருவரும்
தங்கள் இடம் சேர்ந்தனரே!

சுபம்
மங்களம்

மங்களம் ஜய மங்களம்

ஸ்ரீ ஹரிக்கு

பங்கய பாதனுக்கு

பரமதயாளனுக்கு

ஸங்கடம் தீர்ப்போனுக்கு

ஸாது ஸம்ரக்ஷகனுக்கு

அரக்கர்களை அழிக்க

அவதாரம் செய்தோனுக்கு

அரவணை மேல் துயிலும்

அனந்த சயனுக்கு

மங்களம்